விலை சதம் 60

பக்கங்கள் 10

# ஈழநாடு
## வார மலர்

THE EELANADU VARAMALAR

மலர் 22 | பங்குனி 17 | ஜ அவ்வல் 12 | ஞாயிற்றுக்கிழமை | (30—3—80) | இதழ் 49



பாவியுங்கள்!
நாள் எல்லாம்
நறுமணம் கமழும்
அண்ணா பத்தி
ஜெயந்தி பத்தி
கஜானா பத்தி



கண்ணெய் முழுக்குக்கு
சிறந்த
'ஒலிவ்
ஸ்நானப் பவுடரை'
வாங்கி உபயோகியுங்கள்
எங்கும் விற்பனையாகின்றது.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.


"இன ஒதுக்கலுக்கு எதிரான

# தமிழர் கூட்டணி போராட்டம்
# வெற்றிபெறஎமதுவீரவணக்கம்

## மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்மன்றம் அமிருக்கு நன்றிக் கடிதம்

(கொழும்பு)

இலங்கை மாணவர்களின் போராட்டங்களுக்குப் பொதுவாகவும் எமதுபோராட்டத்திற்கு குறிப்பாகவும் நீங்கள் அளித்தபங்களிப்பை பாராட்டுவதோடு இனஒதுக்கலுக்கு எதிராக நீங்களும் உங்கள் கட்சியும் மேற்கொண்டுவரும் போராட்டத்தில் வெற்றி பெற எமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர் மன்றம் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்திற்கு எழுதியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அக்கடிதத்தில்மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

எமதுபல்கலைக்கழக பிரச்னை இப்போது ஒரு முடிவுக்கு வந்துள்ளது.

எட்டு மாதங்களுக்கு முன் தோன்றிய எமது பிரச்னை, வீணை நேரம், பணம், உடல் [illegible] தீர்க்கப்பட்டுள்ளது.

அரசுக்கும் எமக்குமிடையே சமாதானத் தூதுவராக நீங்கள் தலையிட்டிருக்காவிடின் இந்த முடிவு எமக்கு ஏற்பட்டிருக்காது. இதற்குப் பதிலாக மாறுபட்ட பல கடுமையான நடவடிக்கைகளையே நாம் மேற்கொள்ளவேண்டி ஏற்பட்டிருக்கும்.

எமது பிரச்னையின்போது தண்டனைக்குள்ளான 13 மாணவர்களது தண்டனைகளையும் எமதுபல்கலைக்கழகத்தின் புதிய தகுதிவாய்ந்த அதிகாரி ரத்துச் செய்துள்ளார்.

எமது இவ்வெற்றியை மகிழ்வுடன் கொண்டாடும் இவ்வேளையில் நீங்களும் உங்கள் கட்சியைச் சார்ந்தவர்களும் எமது பிரச்னை தொடர்பாக அக்கறையோடு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக நாம் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளோம். (ம-இ)

## மண் சரிவுக்கு இளைஞர் பலி!

### ஆனைக்கோட்டையில் பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

மண்மேடு [illegible] நின்று உழவு இயந்திரத்தில் மண் ஏற்றிய ஒருவர் அம்மண் மேடு சரிந்து விழுந்ததனால் அம்மண்சரிவில் சிக்கி ஸ்தலத்திலேயே மரணமானார்.

இப்பரிதாபச் சம்பவம் நேற்றுக்காலை ஆனைக்கோட்டையில் நடைபெற்றது.

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் நாவாந்துறையிலுள்ள குடாக்கடலை நிரப்பி வீடுகட்டும் திட்டத்திற்கு மண் ஏற்றிவந்த செல்லத்துரை கதிர்காமநாதன் அல்லது தங்கராஜா (வயது 30) என்ற உழவு இயந்திர சாரதியே இவ்வாறு மரணமானார்.

காலஞ்சென்றவர் நேற்று முன்தினமிரவு தமது மனை

(10-ம் பக்கம் பார்க்க)

## வியாழன் முதல் மின்வெட்டு

(கொழும்பு)

ஏப்ரல் மாதம் 3-ம் திகதி முதலே மின்வெட்டை அமுலுக்குக் கொண்டுவர மின்சாரசபை தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே அறிவித்தபடி ஏப்ரல் 1-ம் திகதி முதல் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது என சபை அறிவித்துள்ளது.

காலை 6 மணிமுதல் 8 மணிவரை பின்னர் நண்பகல் 12 மணிமுதல் 2 மணிவரையுமே மின் வெட்டு அமுலிலிருக்கும்.


வெங்காய விதை

பம்பாய் வெங்காய செய்கையாளர்களுக்கு ஓர் வேண்டுதல். இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்திய அரசால் அத்தாட்சி பெற்ற
பூசா ரெட் ரக வெங்காய விதை
இன்னும் சில தினங்களுள் கிடைக்கும்.
உங்கள் தேவைக்கு முன்னதாகவே பதிவு செய்யுங்கள்.
பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்
107, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(5299)



வெளிநாடுகளிலும் கப்பல்களிலும்
தொழில்கள்
NATIONAL INSTITUTES தொழில்நுட்பப் பயிற்சிகளுக்கு2-ம் பக்கம் விளம்பர இல. 5305 பார்க்கவும்.
(5316)



பேக்கரி உரிமையாளர்களுக்கு
ஒரு நற்செய்தி!
எந்தவிதமான மாவாக இருப்பினும்
வாங்குவோர் விரும்பும் வகையில்
மற்றவையைக் காட்டிலும்
ருசியான, தரமான அதிகமான
பாண்களைத் தயாரிக்க
இன்றே பாவியுங்கள்
அதிக பயனைப் பெறுவீர்கள்
ரவர் பிறான்ட் (FRESH) ஈஸ்ற்
தயாரிப்பாளர்கள்:-
இந்தியன் ஈஸ்ற் கம்பனி, பம்பாய்- கல்கத்தா
உலகநாடுகளில் அதிசிறந்த ஈஸ்ற் ஆக
வர்த்தக சந்தையில் பிரபல்யமானது
ஏஜென்ட் அன் டிஸ்ரிபியூட்டர்ஸ்:
சுரேன் டிரேட் ஏஜன்ஸி
(பிரிமியர் பேக்கரி பில்டிங்)
119, மெயின் வீதி — யாழ்ப்பாணம்
மற்றும் கிடைக்குமிடம்:
ஸ்ரீசாயி ஸ்ரோர்ஸ்
(சுபாஸ் கபே முன்பாக)
நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (5320)



திருமண அன்பழைப்பு

மணமகன்: திருவருள் செல்வன்
வைரமுத்து நவரத்தினம்
மணமகள்: திருவளர் செல்வி
சிவமலர் சிவஞானம்
காலம்:- 31-03-1980 திங்கட்கிழமை பகல் 9-47 மணி தொடக்கம் 10-35 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளை,
இடம்:- 169/1, கோவில் வீதி, நல்லூர்.
வரவேற்பு:- 1-04-80 மணமகனில்லம்.
2-04-80 மணமகளில்லம் மாலை 5 முதல் 7 மணி வரை
உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
திருமதி சி. வைரமுத்து
செல்வரத்தினம் ஸ்ரோர்ஸ் (கொழும்பு)
ஸ்ரீ செல்வம் அரிசி ஆலை, ஏழாலை.
திருமதி க. சிவஞானம்
169/1, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
சகலரையும் அன்புடன் அழைக்கின்றார்கள் திரு., திருமதி சி.சின்னத்துரை (மணமகனின் [illegible] தந்தையர்).
[illegible] அன் பிறதர்ஸ், கொழும்பு-யாழ்ப்பாணம். (5350)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபன

# மூலதனத்தில் 10 வீதம் தொழிலாளருக்கு சொந்தம்!

(கொழும்பு)

இலங்கையின் தேசிய செல்வம் சகல பகுதியினருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. தனியார், அரசாங்க செயற்பாட்டை ஒன்றிணைப்பதே இந்த அரசாங்கத்தின் கொள்கையாகும்.

மேற்கண்டவாறு தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றிய வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மூலதனத்தில் 10 வீதம் தொழிலாளர்களுக்குச் சொந்தமாக்கப்பட்டுள்ளது என்றும், இலாபத்திலும் ஒருபகுதி அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுமென்றும் கூறினார்.

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. லயனல் பெர்னாண்டோ பொது மக்களுக்கு சேவை செய்வதையே ஊழியர்கள் தமது கடமையாகக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்ததுடன், இக் கூட்டுத்தாபனத்தில் முதலில் கப்பல், மோட்டார், ஆயுள் காப்புறுதிகள் செய்யப்படுமென்றும், ஏனைய காப்புறுதித் திட்டங்கள் படிப்படியாக மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவித்தார்.

### அமைச்சரின் காப்புறுதி.

அமைச்சர் லலித் அத்துலத் முதலி தமது பெயரில் ஒரு லட்சம் ரூபாவுக்கு விபத்து காப்புறுதி செய்து காப்புறுதிகள் அலுவலகளை ஆரம்பித்து வைத்தார். (வெ)

—

### வாசகர் கவனத்துக்கு

இன்றைய வாரமலரில் 6-ம் பக்கம் வெளிவந்துள்ள நூல் விமர்சனத்தின் மூன்றாம் பந்தியில் 'ஔவையார் பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் எனக் கூறியுள்ளார்' என்றிருப்பதை அதிவீர ராம பாண்டியன் 'பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் எனக் கூறியுள்ளார்' எனத் திருத்திக்கொள்க.

## 'குழந்தைக் குரல்' ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

இரசிகமணி கனக. செந்திநாதனின் நினைவு மலராகச் சமூகத் தொண்டர் க. ச. கந்தசாமியினால் இயற்றி வெளியிடப்பட்ட ''குழந்தைக் குரல்'' பாடல் தொகுதி ஆய்வுப் பேரரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

திரு. க. இரத்தினசபாபதி தலைமையில் நடைபெறும் இவ்வாய்வரங்கில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டு மங்கள விளக்கை ஏற்றி வைப்ப .

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் திரு. க. கைலாசபதி, கலைப்பேரரசு ரி. பொன்னுத்துரை, 'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவா ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர். (அ)

......

## சனசமூகநிலையங்களின் புனரமைப்புப் பற்றி ஆலோசிப்பர்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களை புனரமைப்புச் செய்வதற்கான ஆலோசனைக் கூட்டமொன்று ஞாயிற்றுக் கிழமை காலை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரிவுகளைச் சேர்ந்த, சனசமூக நிலையப் பிரமுகர்களுக்கு, யாழ் மாவட்ட சனசமூக நிலைய உத்தியோகஸ்தர் திரு. வ. கிருஷ்ணசாமி அழைப்பு அனுப்பியுள்ளார். (கெ)

—

## சமாதான நீதவான்



[யாழ்ப்பாணம்]

ஆனைக்கோட்டை உயரப்புலம் அடைக்கலநாயகி ஆலயத்தைச் சேர்ந்தவரும், உணவுக் கட்டுப்பாட்டிலாகாவில் பாதுகாவலராகக் கடமையாற்றி இளைப்பாறியவருமான திரு. வயிரமுத்து சூசைப்பிள்ளை யாழ்ப்பாணம் நீதி நிர்வாக மாவட்டத்திற்கு சமாதான நீதவானாக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டு மாவட்ட நீதிபதி பாலகிட்ணர்முன்னிலையில் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

இவர் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையின். கிளைக்குழுத் தலைவராகவும், ஆனைக்கோட்டை புனித அடைக்கலநாயகி நாட்டுக் கூத்து நாடகமன்றத் தலைவராகவும், புனிதஅடைக்கலநாயகி கோவில் நிர்வாகக்குழு அங்கத்தவராகவும் [illegible] யாளர் சங்க நிர்வாகக்குழு அங்கத்தவராயும் இருந்து சமூகத் தொண்டுபுரிந்துவருகிறார்.


## தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல புடவை அச்சுத்தொழிற்சாலை ஒன்றுக்கு பெண் பிள்ளைகள் தேவை. தையல் வேலை தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. ஏப்ரல் மாதம் 10-ம் திகதிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விளம்பர இல. 5345 C/o 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 5345

## ஜீப் அல்லது லான்ட்ரோவர் தேவை

என்ஜின் இல்லாத அல்லது என்ஜின் பழுதடைந்த நல்ல செசியுடன் உள்ள லான்ட்ரோவர் (Land Rover) அல்லது ஜீப் (Jeep)உடன் தேவை. தொடர்புகொள்ளவும்.

### சாந்தி ரயர் வேக்ஸ்

218/2, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி: 8085

532


## பிறந்ததின வாழ்த்து



செல்வி மா, ஜனுஷ்யா

யாழ்ப்பாணம் நவீன சந்தை, நாதன்ஸ் ஸ்தாபன முதல்வரும், புங்குடுதீவு 12-ம் வட்டாரத்தைச் சேர்ந்தவருமான த. மாணிக்கவாசகர் தங்கலக்சிமி தம்பதிகளின் புதல்வி செல்வி ஜனுஷ்யா இன்று (30-3-80) ஞாயிற்றுக்கிழமை தனது இரண்டாவது பிறந்த தினத்தை யாழ்ப்பாணத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, தாத்தாமார், அப்பம்மா, அம்மம்மா, நாதன் சித்தப்பா, அத்தைமார், மாமாமார், பெரியப்பா, பெரியம்பா, சித்தப்பா மற்றும் அன்பர்கள் ஆகியோர் நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்

5348


# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு 6 அங்குல Atlas Grinding Mill (கிறைன்டிங் மில்) மோட்டருடன் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு. 23, கடைச்சாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 5346

புதிய கார் றேடியோ National Panasonic கசட் - ஸ்ரீரியோ CQ - 6350 ENW FM ஏரியல் ஸ்பீக்கர் EAB-906 N. பிலிப்ஸ் பொக்கட் றேடியோக்கள் MW ந. சபாரெட்ணம் 180, கண்டி வீதி, அரியாலை. 5343

இரண்டு சில்லு மண்ணெண்ணையில் இயங்கும் Komatsu உழவு இயந்திரம் அதற்குரிய உதிரிப் பாகங்களுடனும். மற்றும் பெட்டியுடன் விற்பனைக்கு உண்டு. மோட்டார் சைக்கிளிற்கு மாற்றுவதற்கும் சம்மதம். தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்; S. சிவராசா, புகையிரத நிலைய அதிபர் கமம், 160-ம் கட்டையடி (நவசக்தி பார் அருகாமையில்) பரந்தன். 5349

### தேவை

பாவித்த, நல்ல நிலையில் உள்ள, சிறுவர்க்கான சைக்கிள், கட்டில்கள், மேசைகள், அலுமாரி, கபேட் (Cupboard) தேவைப்படுகின்றன. யோசப் 37/2 மாட்டீன் றோட், யாழ்ப்பாணம். 5344

எஞ்சின் பழுதுபட்ட பாவிக்க முடியாத Honda 50, 70, 90, Moped Auto Cycle Peugeot, Moblette Bravo தேவை. அலோசியஸ், தபாற்கந்தோர், பண்டத்தெருப்பு. 5302

உடுவில், சகல நவீன வசதிகளுடன் கல்லூரிகளுக்கும் மருதனுமடச் சந்திக்கும் அண்மையாக புதிய வீடு விற்பனைக்குண்டு. 25/1, நாலாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 5314

Brownson
வாங்குங்கள்
பிரவுண்சன்
அரறூட்-மா
பிரவுண்சன் அரறூட் மா
அரச உணவு மருந்துச் சட்டத்தின்
கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டது.

### வாடகைக்கு

யாழ். இந்துக் கல்லூரிக்கும் பஸ் நிலையத்திற்கும் இடையில் கஸ்தூரியார் வீதியில் ரியூற்றிக்கு இடவசதி உண்டு. 154, கஸ்தூரியார் வீதியில் நேரில் தொடர்புகொள்ளவும். 5317

### பயிற்சி

3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சியும் 3 மாத மின்னியல் டிப்ளோமா பயிற்சியும் 10-04-1980ல் ஆரம்பமாகின்றன. Institute of Engineering Technology, 11/B, Momsac Building, Stanley Road, Jaffna.

5322

வெளிநாடுகளிலும், கப்பல்களிலும் தொழில்கள் பெறுவதற்குப் பயிற்சிகள் வெல்டிங் (Electric & Gas நவீன முறையில் 3 மாதம், வயறிங் (IEE முறைப்படி) 3 மாதம் P M G (Radio Officers Course) -6 மாதம், Building Construction & Draughtsmanship Transistor Techrology முதலிய பல பயிற்சிகள். எல்லா விபரங்களையும் தரும் இலவச கையேட்டிற்கு உடன் விண்ணப்பிக்கவும். தேசிய தொழிற்பயிற்சி நிறுவனம் (National Institute of Engineering Technology) 57, 59, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 5305

### அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம்

### பகிரங்க ஏலவிற்பனை

எமது சங்கத்தின் 'பெட்போட்' ரக வான் எதிர்வரும் 31-3-80 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு மல்லாகம் காங்கேசன்துறை வீதியில் உள்ள எமது பெற்றோல் நிலைய வளவிற்குள் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் ஏலத்தில் பொருளை எடுப்பவர் முழுப்பணத்தையும் உடன் செலுத்தி வாகனத்தைப் பொறுப்பேற்க வேண்டும். வாகனத்தைப் பார்வையிட விரும்புவோர் மேற்குறிப்பிட்ட இடத்தில் பார்வையிடலாம்.

இங்ஙனம்,
பொதுமுகாமையாளர்.
அளவெட்டி மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம்
5339


## விபத்து ஏற்படுத்திய லொறியின் சாரதி இறங்கி ஓடிவிட்டாராம்

### ஆஸ்பத்திரியில் வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகத்தில் நடைபெற்ற லொறி விபத்தில் சிக்கி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த வயோதிபர் நேற்று முன்தினம் காலை மரணமானர்.

ஏழாலையைச் சேர்ந்த செல்வர் ஆசாரி என்ற 60 வயது வயோதிபரே இவ்வாறு மரணமானார்.

மரணவிசாரணையை மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம் நடத்தினார்.

மல்லாகத்திலிருந்து சுன்னாகம் நோக்கி வந்துகொண்டிருந்த குறிப்பிட்ட லொறி வீதியால் நடந்து சென்றுகொண்டிருந்த இருவரில் ஒருவரை மோதிவிட்டு அடுத்து சைக்கிளில் சென்றுகொண்டிருந்த காலஞ்சென்றவரையும் மோதியதுடன் மின்கம்பத்துடன் முட்டிநின்றதாம், சாரதி உடன் லொறியைவிட்டு ஓடிவிட்டதாகவும் பின்னர் எம். சிறிகாந்தன் என்ற அந்தச் சாரதி பொலிசாரினால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட திரு. அமிர்தலிங்கம், லொறிச்சாரதியை அடுத்த மாதம் 1-ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார். (கொ-இ)

......

## அடுத்தமாதம் புங்குடுதீவு மக்கள் வங்கி திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவிலுள்ள மக்கள் வங்கி அடுத்த மாதம் திறக்கப்படுமென மக்கள் வங்கி யாழ். பிரதேச முகாமையாளர் ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர் திரு. க பொ. இரத்தினத்திற்கு அறிவித்துள்ளார். (வெ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# "நடத்துனர் வாழ்க்கை நடத்துகிறார்"

த. சண்முகசுந்தரம்

'இந்தக்காலத்திலே விலைவாசி ஏறுகிறதைப் பார்த்தால் வாழ்க்கை நடத்தமுடியாது. நாலுதுண்டு மீனுக்கு ஐந்து ரூபாயாம் எட பாமனே!என்று கூறியபடி என்மனைவி முத்துலட்சுமியென்னும்முத்து உள்ளே வந்தாள்.

'இது எனக்குக் கடினமான அலுவல் இல்லை. விலைவாசி ஏதோ பேயோ பூதமோ?உன்னுடன் மூப்பது ஆண்டுகள் வாழ்க்கை நடத்திட்போட்டேனும். விலைவாசி என்னசெய்யும்?' எனக் கூறலாம் போல இருந்தது. காலை பத்துமணி போல கண்ணகி வழக்குரை காதையை என்வீட்டிலே உருவாக்கவேண்டும் என நினைத்துப் பேசாமலிருந்தேன்.

என்னசெய்வது? எல்லாம் கலிகாலம்' என்றாள் முத்து.

'நல்லது மீன்வாங்கக் காசு போதாவிட்டால் தருகிறேன்' வாங்கு. இல்லாவிட்டால் மீன் தின்பதை நிறுத்து' என்றேன்.

'உங்களுடைய உழைப்பிலே தான் வீடு நடக்கிறதாக்கும்? பிள்ளைகள் மூன்றும் உழைக்காவிட்டால் என்ன செய்கிறது? உங்களுடைய பென்சன் உப்புப்புளிக்குப் போதாது' என்றாள்.

எனக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது அதனை அடக்கிக்கொண்டுமிகவும் நிதானமாக மறுமொழி சொன்னேன். 'அந்தக்காலத்திலே உன்னை நான் சீதனமில்லாமல் கைப்பிடித்தேன். மூன்று பிள்ளைகளையும் என் சம்பளத்திலே படிப்பித்து உத்தியோகமாக்கினேன். காசுபோதாதபோது என் அம்மா தந்த காணியை விற்றுப் படிப்பித்தேன்' என்று மிளகும்; மிளகாயும் கலந்த தொனியில் மறுமொழி சொன்னேன்.

முத்துவின் முகம் சுண்டிவிட்டது. ஏதோ மறுமொழி சொல்ல வாயெடுத்தாள்.பின்னர் பேசவில்லை. நானும் விட்டுக்கொடுக்காமல் பேசுவேன் என்பது அவளுக்குத்தெரியும் 'சிவசத்தியமாக நான் இனி மீன் தின்னமாட்டேன்' என்று என்னுடன் வாக்குவாதப்பட்டுக்கொண்டு என் மனைவி முத்து பலமுறை சொல்வாள். அதற்கெல்லாம் நான் இடம் கொடுப்பதில்லை முத்துவைத் தொடர்ந்து மீன் தின்னும்படி வற்புறுத்திவந்தேன் இந்தக் கதையைச் சொல்லி முத்துவை நோண்டிவிட விரும்பினேன். அதற்கிடையில் படலையில் யாரோ அவலக்குரல் கொடுப்பதைக் கேட்டேன்.

''ஐயா! ஐயா! அம்மா! அம்மா! அவசரம், நாயைப் பிடியுங்கள். ஐயா! அம்மா!'' என இனிய குரல் ஒன்று கேட்டது இந்த அவலத்திலும் அந்தக் குரலில் இனிமை கலந்திருந்தது

''இங்கே நாய் கட்டி நிற்கின்றது. வேறு ஒரு நாய் தான் மிகவும் ஆபத்தானது. அதைக் கட்ட முடியாது. முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஒருமுறை கட்டினேன்'' என மறுமொழி சொல்ல விரும்பினேன். இப்படிக் கிண்டல் செய்தால் என் முத்து கோபம் கொள்வாள். கோபத்திலும் அவளின் அழகு அழகு தான். வயதிற்கு ஏற்ற அழகு; முத்துவின் பெண்மை விரைந்து தொழிற்பட்டது. ஒரே தாவாகத் தாவினாள். ''அடுத்த வீட்டு யாழினியின் குரல் அது. மரக்கட்டைபோல இருக்கிறீர்கள்'' என்றாள்.

''யாரது யாழினி?'' என்று கேட்டேன்.

''ஐயோ! ஐயோ! என்னுடைய மனிசன் அறணைக் குஞ்சு-மறதி அதிகம். போன கிழமை கலியாணம் நடக்கவில்லையோ? அடுத்த வீட்டு யாழினி'' என்ற முத்து ''இரு பிள்ளை, இதோ வாறன், நாய் கட்டி நிற்கின்றது. உள்ளே வா '' என்றாள்.

புதுமணப் பெண் யாழினியும் அவளின் கணவனும் உள்ளே வந்தனர். யாழினியை நிமிர்ந்து பார்த்தேன். சற்றுக் கறுப்புத்தான். ஏதோ பாடப் புத்தகத்தில் இடம்பெற்ற யாழ் நங்கை போலக் காட்சி தந்தாள். முதுமையை எய்திய என்னைக்கூட அந்த யாழினியின் அழகு கவர்ந்தது, யாழினியின் மாப்பிள்ளை மிகவும் அடக்கமாக எனபக்கத்தில் வந்து நின்றான்.

''ஐயா!'' என்ற யாழினி விம்மினாள்.

''இல்லை, மாமா என்று சொல்'' என முத்து திருத்தினாள். யாழினியின் காதிலே விழவில்லை. ''டாக்குத்தர் ஐயா! என்னுடைய அப்பாவிற்கு சுகமில்லை'' என்றாள்,

''நல்லது நீயும் கொண்டு வாருங்கள் அப்பாவை'' என்றேன்.

''டாக்குத்தர் ஐயா! மாமா விழுந்துவிட்டார்'' என்றான் அந்தப் புது மாப் பிள்ளை.

''நல்லது. இதோ வருகிறேன்'' என நான் கிழம்ப முன் என் மருந்துப் பையை முத்து எடுத்துவிட்டாள். முத்துவிற்கு முந்தின குணம் பல வேலையிலும் தொழிற்படும்.

நான் முன்னே சென்றேன். முத்து பையுடன் பின் வந்தாள். மாப்பிள்ளையும் பெண்ணும் பின்னே வந்தார்கள். நான் உள்ளே போனதும் நோயாளியைச் சுற்றவரநின்ற ஒரு சிலர் மரியாதையாக விலத்திநின்றனர். மருந்துப் பையை வாங்கினேன் மரியாதையாக கதிரை ஒன்றைமாப்பிள்ளை தூக்கிவைத்தான், பிரம்பு அறுந்து மை மங்கிய அந்தக் கதிரை வறுமையின் மௌனமான விளம்பரம். நோயாளியைப் பாயிலே கிடத்தியிருந்தார்கள். வழக்கமான பரிசோதனைகளைச் செய்தேன். மூச்சு ஒழுங்காகவந்தது. நாடித்துடிப்பு நல்லாக இருந்தது. இரத்த அழுத்தம் சற்றுக்கூடுதலாக இருந்தது.

'செல்லையா! செல்லையா!' எனக் குரல்கொடுத்துப் பார்த்தேன். காதிலே நுள்ளிப்பார்த்தேன். நோயாளியிடமிருந்து எதுவும் மறுமொழி வரவில்லை. 'என்ன நடந்தது?'என்று யாழினியைக் கேட்டேன். யாழினியின் மறுமொழிவிம்மல்தான். மாப்பிள்ளை மறுமொழி கூறினான்.

'மாமா வழக்கம்போலவேலை முடிந்ததும் வந்தார். வரும்போதே மகளைப்பார்த்து 'என் காக்கிச் சட்டைக்கு இழைப் போட்டாயோ' என்று மகளைக் கேட்டார். 'காக்கி நூல் இல்லை' என்றாள் யாழினி. அதற்கு மாமா சோர்ப்பட்டார். 'இந்த இழவு வீட்டிலே என்ன கேட்டாலும் இல்லை என்ற பல்லவிதான். நாளைக்குப் போடச் சட்டை இல்லை. என்ன வாழ்க்கை? ஒரே தரித்திரம்தான். இந்தக்கட்டையை விட்டுவிட்டால்...' என்றவர் சரிந்து விழுந்துவிட்டார்,' ஆணாக இருந்தாலும் அனுதாபம்மிக்க அந்த இளைஞன் அழுதேவிட்டான். 'மாமியும் வீட்டில் இல்லை. எங்கோ போய்விட்டார்' எனத் தன் பேச்சை முடித்தான் மாப்பிள்ளை. இரத்த அழுத்தத்தைக் குறைக்க உடனே ஊசி மருந்தைக் கொடுத்தேன்.

எனக்கு இந்தச் செல்லையாவைத் தெரியாது. இரண்டு மாதத்திற்கு முன்னர் எமது வீட்டிற்குப் பக்கத்திலிருந்த வீட்டிற்குச் செல்லையா குடும்பத்தினர் வந்தனர். வாடகை கொடுத்து இருக்கின்றனர். முத்துவோடு இந்த யாழினியும தாயும் அன்பாகப் பழகுவார்கள். முத்துவிற்கு ஏதாவது கைஉதவியை யாழினி செய்துகொடுப்பாள். ஒரு வாரத்திற்கு முன்னர் நடந்த யாழினியின் திருமணத்திற்குப் போயிருந்தேன். அதுதான் நான் அவர்களுடைய வீட்டிற்குப்போனது.முதல்முறையாக, பின்னர் இப்பொழுது வந்துள்ளேன். ஊசி மருந்து வேலை செய்யத் தொடங்கியது போலும். முத்து என்பக்கத்திலே நின்றாள். இருந்தாற்போல நோயாளி செல்லையா வாய்புலம்பத் தொடங்கினர். கண்கள் இறுக மூடியிருந்தன. அங்கு நின்றவர்களைச் சற்று விலகி நிற்கும்படி பணித்தேன். நோயாளி புலம்பினார்:

'ஐயா! செல்லத்துரை! என்னை முந்திவிடுங்கள்.போன கிழமைதான் மகளின் கலியாணம்நடந்தது கோழியன்பறந்து வரப்போறான். குதிரையன் பாய்ந்து வந்துவிட்டான். முயலன் வரநேரமாகும். ஐயா! செல்லத்துரை! பார்த்துச்செய்யவும். யாழ்ப்பாணம் போகிறவர்கள் வரலாம். கடுகதி இது. பெரிய சந்திகளிலேதான் நிற்கும். சில்லறை இருந்தால் கொண்டுவரவும் ... அப்பு இதிலே நின்றுசரகம்ஆடாதே. செருப்புக்காலாலே என்னை மிதித்துத்தள்ளி விட்டாய் ஆய்ச்சி... ஓரே குடுமிதிதான். தம்பி ஒரு ரூபாவிற்கு என்ன நூறு ரூபாத்தாள்...என் கை விரலை முறித்துத் தரவோ? சந்தை ஆச்சி! இது கடுகதி. கடகம்வைக்கமுடியாது.என்ன பார்த்துச் செய்யட்டோ? கடகம் ஏற்றினல் எனக்குக் குற்றம் அடிப்பார்கள் ஆச்சி. அடுத்த நிலை வாவன். ஏறியவர்கள் அப்படியே முன்னுக்கு வாருங்கள். எத்தனை முறை கத்துவது? கத்திக் கத்தித் தொண்டை காய்ந்துவிட்டது. என்ன? சடைவளர்த்த தம்பி சோடா வாங்கித் தரப் போறிபோ?,இந்தநக்கல் அடிப்பதற்கு, நையாண்டிசெய்வதற்கு வேறு ஆளைப்பாரும். காவோலை விழக் குருத்தோலை ஏதோ செய்ததாம்...அண்ணை பொறு. பாக்குவாங்க...உனக்கும் வேணுமோ? நல்லது வாங்கிவாறன்...சரி அண்ணை எடு. ஐயா! செல்லத்துரை இப்படி உங்களுடைய கையாலை இதைப் பதிந்து...ஐயா எனக்கு ஒரே களைப்பு.அலுப்பு, பஞ்சி. ஏனோ தெரியாது. அப்படியே அங்காலே ஒருபோக்காகப்போய்விட்டால்... ஐயா! நான் அப்படிச்சொல்லவில்லை. உங்களைப்போல் நல்லவரைக் காண்பது. சரி அண்ணை. எடு. நல்லது...'

இதனை உற்றுக் கேட்ட எனக்கு உடனே அலுவல் விளங்கிவிட்டது. தன் அன்றாட வாழ்விலே நடப்பதை அப்படியே ஒப்படைக்கின்றார். அறிவு மயங்கிய நிலையில் இந்தப் பேச்சு அப்படியே ஒலிப்பதிவு நாடாப் போல இயங்குகின்றது. ஒரு சிலர் வாய்விட்டுச் சிரித்தனர்; மற்றவர் சிரிப்பை அடக்க முயன்றனர். புதுப் பெண்பிள்ளை யாழினி அழுதாள். மாப்பிள்ளையும் அழுதான் முத்து மாத்திரம் என்னிடம் வந்து, மிகவும் மரியாதையாக, ''ஏதாவது கடுமையோ?'' என்று வினவினாள்.

''பயப்பட ஒன்றுமில்லை பார்த்துச் செய்யலாம் மேலும் ஒரு ஊசி போடப் போகின்றேன். தயவு செய்து எல்லோரும் போய்விடுங்கள். நோயாளி கண் உறங்கட்டும்'' என்றேன். எல்லோரும் போய் விட்டனர். முத்து, நான், தம்பதிகள் மட்டும் மிச்சம். நோயாளிக்கு நித்திரை மருந்தை ஊசி மூலம் கொடுத்தேன்.

''மாமாவிற்கு... இல்லை... டாக்குத்தர் ஐயாவிற்குக் கோப்பியோ? சோடாவோ?'' என்றாள் யாழினி.

''இரு தங்கச்சி. நான் போய் எல்லோருக்கும் கோப்பி போட்டுக் கொண்டு வருகிறேன்'' எனக் கூறிவிட்டு முத்து போய் விட்டாள். நிலத்திலே உள்ள பாயிலே நோயாளி செல்லையா, கதிரையிலே நான், வளர்த்த நாய் முகத்தைப் பார்ப்பது போல என்னையே பார்த்துக் கொண்டிருந்தனர் யாழினியும் அவள் கணவனும்.

மாப்பிள்ளை பேசினான். ''டாக்குத்தர் ஐயா! மாமாவிற்கு எதுவும் நடக்காது தானே? நான் மாப்பிள்ளையாக இந்த வீட்டிற்குள் வந்ததும் வராததுமாக... இப்படி ஒரு தாக்கம். ஐயா! நான் என்ன செய்யலாம்?''

''அப்படிப் பயப்பிட ஒன்றுமில்லை. தேவை என்றால் ஆசுப்பத்திரியில் நான் சேர்த்துவிடுகிறேன்'' என்றேன். யாழினி திடீரெனக் காலில் விழுந்து வணங்கினாள். ''தங்கச்சி என்னைக் கும்பிடாதே, அதோ சுவரிலே முருகன் படம் அவனைக் கும்பிடு'' என்றேன்.

''ஐயா! டாக்குத்தர் ஐயா! தெய்வம் எங்களைக் கைவிட்டு விட்டது. அது எப்படியோ நடந்தது உங்களின் உதவிதான் இப்போது'' என்றாள் யாழினி. இதற்கு எப்படித் தேறுதல் சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. இருதயத்தின் துடிப்பு எனக்கு விளங்கும்; ஆனால் நெஞ்சில் விளையும், அலையும், உலையும் உணர்ச்சி பற்றி எனக்குத் தெரியாது. சோற்றுப் பானைக்குச் சோற்றின் உருசி தெரியுமோ? நித்திரை மருந்து ஊசி வேலை செய்யத் தொடங்கிவிட்டது. நோயாளி நித்திரையாகிவிட்டார். முத்து வந்து கோப்பியை எல்லோருக்கும் பகிர்ந்து தந்தாள். புதுமணத் தம்பதிகள் எங்கள் ஆசிக்காக நிற்பது போல நின்றனர். பின்னர் அவர்களை நோக்கி ''ஐயா நோயாளியைப்பார்த்துக் கொண்டிருப்பார். நீங்கள் வாருங்கள் விருந்திற்கு இன்று நான் சாப்பாடு தருவேன். இங்கே சாப்பாடு சமையல் நடக்கவில்லைப் போலத் தெரிகின்றது'' என்ற முத்து என்னைப்பார்த்துக் கண்ணைக் காட்டி இரண்டு விரலைக் காட்டினாள். எனக்கு எதுவும் விளங்கவில்லை. என் பைக்குள் கையைவைத்து இருபது ரூபாவை எடுத்து மடித்து வைத்தாள் முத்து. அப்போது தான் எனக்கு விளங்கியது. புதுமணத் தம்பதிகளுக்கு அன்பளிப்பு அப்படியே வழங்கினேன்.

''ஐயா மருந்துஞ் செய்து காசும் தந்து...'' என்ற மாப்பிள்ளை என்காலிலே விழுந்து வணங்கினான். இது எனக்குப் பிடிக்கவில்லை பேசாமல் இருந்தேன். என் முத்துவும் இந்தத் தம்பதிகளும் போய் விட்டனர், அன்றுகாலை முத்து நிறைய இடியப்பம், குழம்பு. சொதி என்று சமைத்து வைத்திருந்தாள். அரைமணி நேரம் இப்படிப்போயிற்று. செல்லைய ஆழ்ந்து உறங்கி விட்டார் செல்லையாவின் மனைவி உள்ளே வந்தாள். ''ஐயா! இது என்ன?'' என்று [illegible] தாள் சத்தப் [illegible] என்று சமிக்ஞை செய்தேன். பின்னர் மெல்லிய குரலிலே பேசினேன்

''ஒன்றுமில்லை சற்று பலக்கம் ஊசி போட்டேன் பயப்படத்தேவையில்லை. மாப்பிள்ளை பெண்பிள்ளை எமது வீட்டில் நீங்களும் போனால் அம்மா கோப்பி [illegible]'' என்று நான் சொன்னேன்.

''ஐயா! மாப்பிள்ளைக்கு இன்னும் கொடுக்கல் வாங்கல் முடியவில்லை. தைக்கடன் வாங்குவதற்கு நாளை நேற்றுப் போய் இட்டதான் வாறேன், முருகா! இங்கு இப்படி'' என்று செல்லையாவின் மனைவியும் புலம்பினாள். நான் தேறுதல் சொன்னேன் இதற்கிடையில் முத்துவும் தம்பதிகளும் வந்து விட்டனர், எஞ்சி [illegible] கோப்பியை வார்த்து முத்து செல்லையாவின் மனைவியிடம் கொடுத்தாள். மிகவும் பணிவுடன் அந்தப் பெண் அதனை வாங்கி அருந்தினாள் போவதற்குநான் எழுந்தேன். முத்து என்னைத் தொடர்ந்து வந்தாள்.

மறுநாட் காலை வந்தது, நோயாளி இரவுப் பொழுதை நன்கு கழித்தார் என அறிந்தேன். அதன் பின்னர் செல்லையா தம்பதிகள் என்முன் வந்து நின்றனர். ''செல்லையா! இப்படி நடந்து திரியப்படாது'' என்றேன். நேற்றுப் புதுமணத் தம்பதிகள் என் ஆசிக்காக வந்து நின்றனர். ஆசிசொல்ல எனக்குத் தகுதி உண்டோ? இல்லை. தகுதியுள்ளவர்கள்தான் உலகில் எல்லாவற்றையும் செய்கின்றனரோ) தகுதி யுள்ளவர் சமுதாயத்தில் பின்னணியில், தகுதியில்லாதவர் முன்னணியில். இது உலகம்' உணர்ச்சி வசப்பட்டுப் பேசினேன்.

''செல்லையா! உனக்கு ஒன்றும் செய்யாது. இரண்டு நாள் ஓய்வு போதும். நரம்புப் பலவீனம். இன்னும் மருந்து தருகிறேன். அதுசரி, செல்லையாவின் மனைவிக்கு ஒரு புத்திமதி. உங்கள் கணவன் நல்லவர். அவருக்குத் தொழில்முறையாகப்பல தொல்லை. வீட்டுத் தொல்லை. நீங்கள் ஒன்று செய்யலாம், செல்லையா தன் துன்பங்களை எல்லாம் சொல்வார். இல்லாவிட்டால் அவரைக் கொண்டு நீங்கள் சொல்ல வைக்க வேண்டும். வாய் திறந்து அவர்பேசினால், நம்பிக்கைக்குப் பாத்திரமான உங்களுடன் பேசினால் எல்லாம் சரிவரும். அவருக்குத்தொழில் பெரும் பாரம். கவலை மறு பாரம். அவருக்கு அன்பு தேவை. அனுதாபம் தேவை. பின்னர்தான் சத்துணவு தேவை'' என்று பேச்சை முடித்தேன்.

புதுமணத் தம்பதிகளுக்கும் ஆசி தேவை. நைந்து உடைந்து போன இப்படியான தம்பதிகளுக்கும் ஆசி தேவை. அதிலும் சமுதாயத்தால் மதிக்கப்படாதவர்களுக்கு அன்பு தேவை ஆசிதேவை; பின்னர் தான் மருந்து தேவை; உணவுதேவை. இப்படி வாழ்க்கை நடத்துபவருக்காகச் சமுதாயம் 'என்ன செய்கின்றது? இப்படிக்கேள்வி கேட்டவர்பலர். மறுமொழி சொன்னவர் சிலர்.

(யாவும் கற்பனை)

## முதல் நடுக்கம்

'நான் முதன்முதல் பாராளுமன்றத்தைக் கண்டு நடுநடுங்கினேன். நான் குதிரைப்படைக்குத் தலைமைதாங்கிப் போர்க்களத்தைநோக்கிச்சென்று போரிட்டிருப்பேன்; அது கடினமாகத் தோன்றியிராது பாராளுமன்றத்தில் முதல் முதல் பேசத் தொடங்கிய எனக்குப் ரோசத்தைக் கொடுத்தது'

—டிஸ்ரெயிலி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'இராவ்பகதூர்' சி. வை. தாமோதரம்பிள்ளை

**இரண்டாயிரம் ஆண்டுகளாக கடைச் சங்கத்தாலும் முடியாத, தொல்காப்பிய பொருளதிகாரத்தை தமிழ் உலகுக்கு அளித்து பெரியோராலும், புலவர் பெருமக்களாலும் போற்றிப் புகழப்பட்டார்—சி.வை.தா.**

இ. சிதம்பரப்பிள்ளை

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட வைரவநாதருக்கும், ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட பெருந்தேவி என்பவருக்கும் புத்திரர்கள் ஐவர். சிரேஷ்டர் தான் தமிழ் தந்த 'இராவ்பகதூர்' தாமோதரம் பிள்ளை. மற்றையோர் முறையே டாக்டர் நல்லதம்பிப்பிள்ளை, வித்துவான் சின்னப்பாபிள்ளை, இளையதம்பிப் பிள்ளை, அப்புக்குட்டியா பிள்ளை என்பவர்களாவர்.

இந்த ஐவரில் சிரோரத்தினமாக - சிரேஷ்டராக - தமிழ் கூறும் நல்லுலகில் பிரகாசிப்பவராக உள்ளவர் நமது பெருமதிப்புக்குரிய சி. வை. தா. அவர்கள், இவர் 1832-ம் ஆண்டு புரட்டாதி 12-ம் திகதி பிறந்தவர். இளமையில் தந்தையாரிடம் நீதி நூல்களையும் சிற்றிலக்கியங்களையும் கற்றவர் பின்னர் சுன்னாகம் முத்துக்குமார கவிராச சேகரர் இவரது வித்யாகுருவானார். சி. வை. தா அவர்கள் தாம் அச்சிட்ட நூல்களின் பதிப்புரை தோறும்' தமது குரவராகிய கவிராசருக்கு உள்ளங் கனிந்து உருகி உருகி செய்யுளால் வணக்கங் கூறுவர்.

## 'சூளாமணி' ஆராய்வு

சி. வை. தாமோதரம்பிள்ளையின் மூன்றுவது சகோதரரான இளயதம்பிப்பிள்ளை றங்கூனில் அக்கவுண்டன்ட் ஆகப் பணியாற்றியவர். சி. வை. தா. அவர்கள் 1889-ம் வருடம் தொண்டமான் புதுக்கோட்டையிலிருந்து சூளாமணியை ஆராய்ந்து பதிப்பித்தபோது இளையதம்பிப் பிள்ளை தமது சொந்தப் பணமாக நூறு ரூபாவும், தமது நண்பர்கள் மூலம் நானூறு ரூபாவும் சேர்த்து மொத்தம் ஐந்நூறு ரூபாவைத் தமையனுக்கு அனுப்பித் தமிழ்த் தொண்டு புரிவித்தவர். இவரின் சந்ததியார் இன்றைக்கும் றங்கூனில் இருக்கிறார்கள்.

தாமோதரம்பிள்ளையின் இரண்டாவது தம்பி வித்துவான் சின்னப்பாபிள்ளை. இவர் ஆனைப்பந்தியில் வாழ்ந்தவர், இவருக்குப் பிள்ளைகள் இல்லை. தனது இரண்டாவது தமையன் டாக்டர் நல்லதம்பிப்பிள்ளை காலமாக, அவரின் பிள்ளைகள் தேவராசனையும், ஜீவாம்பிகையையும் வளர்த்து மணம் செய்து வைத்தவர். தனது தமையன் தாமோதரம் பிள்ளையின் சிறப்பியல்புகளை, அவர் பிறந்தபோது,

''சற்றூர்க் கினிமையுஞ்
சைவர்க்கு மாண்புங்
கருதுசெல்வம்
அற்றூர்க் குதவியுங் கல்வி
கற்போருக்
கரும்பொருளும்
உற்றூர்க்குக் கீர்த்தியு
நட்டார்க்குறுதி
யுடனறிவும்
பற்றுருக் கச்சமுந் தாமோ
தரன் பின் பறந்தனவே''

என்று கூறி வருந்தியவர்.

பிள்ளையவர்கள், பாரதம், இராமாயணம் முதலிய இலக்கியங்களிலும், நன்னூல், யாப்பருங்கலம், தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களிலும், திருக்குறள், நாலடியார் முதலிய நீதி நூல்களிலும், சைவ நூல்கள் பலவற்றிலும் பெரும் பயிற்சியுள்ளவர். பலவகைக் கவிகள் பாடும் திறமுள்ளவர். சைவ மகத்துவம், கட்டளைக் கலித்துறை என்னும் நூல்களும் வேறு சில நூல்களுஞ் செய்தவர். உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், மாயூரம் வேதநாயகம்பிள்ளை என்பவர்களின் கவிகளை வியந்து தமது கவிகளால் அவர்களைச் சிறப்பித்தவர்.

## சைவப் பாடசாலையை ஆரம்பித்தார்

இவர் திருவாவடுதுறை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர், சம்பானண்டிதர் முதலானோரில் பெருமதிப்புள்ளவர். தமது செய்யுட்களால அவர்களைச் சிறப்பித்துப் பாடியவர். தமிழ் வளர்ச்சியிலும், தமிழ்ப் பாடசாலைகளிலும் பேரபிமானம் உள்ளவர் ஏழாலையில் ஒரு சைவப் பாடசாலையைத் தாது வருடம் தாபித்தார். சுன்னாகம் முருகேச பண்டிதர், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் என்போரை உபாத்தியாயர்களாக அப்பாடசாலைக்கு நியோகித்தவர். இதனை முருகேச பண்டிதர்,

"தாது வருடந் தனிலா
வணி பத்தாந்
தேதி புகழ்வாரம் தீபநாள்
ஓது புகழ்
தாமோ தரேந்திரனார்
தர்ம வித்தியாசாலை
நாமாரம் பஞ்செய்த நாள்"

என்று கூறுவர்.

நாவலர் பெருமானின் அடிச்சுவட்டை அகலாது தொடர்ந்தவர். ஆறுமுகநாவலர் பதிப்பித்து வெளியிட்ட நூல்களுக்குப் பக்கபலமாகவிருந்து அவருக்கு உதவியவர். அதனால் நாவலர் அவர்களே பரிசோதித்துக் கொடுத்த தொல்காப்பியம் சொல்லதிகாரத்தைப் பிள்ளையவர்கள் தம் பெயரால் பதிப்பித்து வெளியிட ஆரம்பஞ் செய்து வைத்தார்.

பழந் தமிழ் நூல்களில் மனம் பறிகொடுத்தவர் பிள்ளை அவர்கள். வீரசோழியம், கலித்தொகை, இலக்கண விளக்கம், சூளாமணி, தொல்காப்பியம் எழுத்ததிகாரம் என்பன, தமிழ் நாடு முழுவதும் அலைந்து திரிந்து உருக்குலைந்த நிலையில் தேடிப் பெற்ற ஏடுகளை ஒப்புமை பார்த்துப் பிள்ளை அவர்களால் திருத்தமுறை அச்சு வாகனம் ஏற்றப்பட்டு வெளி வந்தன.

ஓர் அற்புதம்! ஆனல் உண்மை.

## பாண்டிய அரசனின் அவல ஒலி!

"எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெற்றும் பெற்றிலேம்"

கடைச்சங்க காலத்துப் பாண்டிய அரசனொருவன் எழுப்பிய அவல ஒலிதான் இது. இந்த ஒலி தமிழ் நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் எதிரொலித்தது. ஆண்டுகள் பல கழிந்தன. கழிந்துமென்! தொல்காப்பியப் பொருளதிகாரம் என்ற பேச்சே இல்லை. அரசன் புடைபடக் கவன்றான். ஆலவாய் அண்ணலின் சந்நிதியில் தவங் கிடந்தான். அவனுக்கிரங்கிய பெருமான் ஒரு இறையனார் அகப்பொருளை அருளினார். அரசனுக்கு ஒருவாறு உயிர் வந்தது.

கடைச்சங்க காலம் முடத் திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி ஈருக நாற்பத் தொன்பதின்மர் [illegible] இரண்டாயிரம் வருஷம் என்ப. சங்கம் ஒழிந்தது சந்திரவம்சத்தில் கடைசி அரசனான கூன் பாண்டியன் காலம். பின் சோமசுந்தரன் முதல் பராக்கிரமன் வரைக்கும் அநுலோம பாண்டியர்கள் நாற்பத்திரண்டு பேர் அரசு செய்திருக்கிறார்கள். இதில் ஏறக்குறைய ஆயிரத்தைம்பது ஆண்டுகள். பின்னர் துலுக்கர் ஆட்சி எண்ணூற்றைம்பது ஆண்டுகள். எனவே, ஏறக்குறைய இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளாக கடைச் சங்க காலத்துப் பாண்டிய அரசனின் அவல ஒலி, ஒலித்துக்கொண்டே இருந்தது. அந்த ஒலி ஒரு இறையனார் அகப்பொருளைத் தந்ததே தவிர அந்தத் தொல்காப்பியப் பொருளதிகாரத்தைத் தரவில்லை. இஃதிங்வாருக,

## தொல்காப்பிய பொருளதிகாரம்

தமிழ் தந்த தாமோதரம் பிள்ளை. பழந் தமிழ் நூற் பரவையில் மூழ்கினார். தமிழ் நாடு முழுவதும் அலைமோதியது. சுழி ஓடினார். இறுதியில் மூத்தான முத்தாகத் தொல்காப்பியப் பொருளதிகாரத்தைத் தமிழ் உலகுக்கு எடுத்து அளித்தார். கடைச்சங்கம் எங்கே! தாமோதரம்பிள்ளை எங்கே! பாண்டிய அரசனின் அவல ஒலி ஓய்ந்தது. 1885-ல் தமிழ் நாடு முழுவதும் பவனி வந்தது தொல்காப்பியப் பொருளதிகாரம். பெரியோரும் புலவர் பெருமக்களுங் கரம் கூப்பிச் சிரம் தாழ்த்தி ஆனந்தக் கண்ணீர் உகுத்தனர். தமிழ் வாழ்ந்தது! தமிழ் மக்கள் உய்ந்தனர்! அந்த மகான் திருநாமம் வாழ்வதாக!

தமிழ் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் பாண்டித்தியமுள்ளவர்கள் பிள்ளை அவர்கள். தெல்லிப்பழை அமெரிக்க மிஷன் பாடசாலை, வட்டுக்கோட்டைச் சர்வ சாத்திரக் கல்லூரி என்பன ஆங்கிலத்தில் அவருக்குப் புலமையை உண்டாக்கின. கறல் விசுவநாதபிள்ளை, வித்துவான் கதிரைவேற்பிள்ளை, நெவின்ஸ், சீ பீ. மில்ஸ் என்போர் அவரது புகழ் பெற்ற ஆசிரியர்கள், கணிதம், ஆங்கிலம், தமிழ், தத்துவம், வானசாத்திரம் என்பன அவர் சிறப்புச் சித்தி எய்திய பாடங்கள். இவ்வாறு சிறப்பெய்தித் தமது இருபதாவது வயதில் 1852-ல் கோப்பாய் போதனா பாடசாலையில் ஆசிரியரானார்.

## சென்னையில் பத்திரிகை ஆசிரியர்

யாழ்ப்பாணத்தில் மிஷனரி பாதிரி [illegible] துரை. நாவலர் பெருமான் மத்திய கல்லூரியில் ஆசிரியத் தொழிலை விட்டு நீங்கியதாலும், அவரது தொடர்பை நிலையாக வைத்திருக்க முடியாமையாலும் மிக வருந்தி துறவுள்ளங் கொண்டு பாதிரி உத்தியோகத்தில் நீங்கிச் சென்னை சென்று 'தினவர்த்தமானி' என்னும் பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்தார். அவர் சி வை. தா. அவர்களின் விஸ்தாரமான படிப்பையும் விவேக ஆற்றலையும் அறிந்து அவரைச் சென்னைக்கு அழைத்துத் தினவர்த்தமானி ஆசிரியராக நியமித்தார்கள். அக்காலத்தில் சென்னையில் பிரசித்திபெற்ற கல்விமான்களான ஆங்கிலேய துரை, மக்கள் இவரில்லம் தேடி வந்து தமிழ் படித்துப் புலமை பெற்றனர். இதனல் இவரது புகழ் சென்னையில் பரிமளித்தது. அதனல் சென்னை இராசதானிக் கல்லூரியில் ஆசிரியராகச் சென்னை அரசாங்கம் நியமித்தது. இவர் அங்கே படிப்பிக்கும் காலத்திலேதான் சென்னைச் சர்வகலாசாலை தாபிக்கப்பெற்றது. 1857ல் முதன்முதல் கலாசாலை நடாத்திய பி. ஏ. பரீட்சையில் நான்கு மாதங்கள்மட்டும் படித்த பிள்ளையவர்கள், தென் கிழக்காசியாவிலேயே சிறப்புச் சித்தி எய்தி முதலாவதாகத் தேறினார். பின் கள்ளிக்கோட்டையில் ஆசிரியப்பணி செய்தார். இவரது பேராற்றலைக் கண்ட அரசு, அரசாங்க வரவு செலவிக் கணக்குப் பகுதியில் கணக்காளராக நியமித்தது. அதிலே அவர்காட்டிய திறமையினலும், பி. எல். பரீட்சை தேறியதனலும் நீதிபதி உத்தியோகம் கிடைக்கப்பெற்றார்.

இதன் பின்னர்தான் கடல் மடை திறந்தாற்போல சி. வை. தா. அவர்களுக்குத் தமிழ்நூல்களை வெளியிடுவதில் பேரெழுச்சியோடு கூடிய ஆர்வம் பிறந்தது. பல நூல்கள் வெளிவந்தன. தமிமுலகம் தலைநிமிர்ந்தது. சங்க இலங்கியங்கள் தலைதப்பின. தமிழர் ஒளி பெற்றனர்.

## இராவ்பகதூர் விருது

பிள்ளை அவர்களின் சலியா உழைப்பு, பரந்தமனப்பான்மையோடுகூடிய பொதுத் தொண்டு, எடுத்த கருமங்களை மிகச் சிறப்போடு முடிக்கும் பேராற்றல், தாம்பெற்ற உத்தியோகங்கள், பொலிவுற்றுப் பிரகாசிக்கச் செய்யும் துடிப்பு முதலியன அரசாங்கத்தின் பெருமதிப்பை அவருக்குத் தேடிக்கொடுத்தன. அதனல் சென்னை அரசாங்கம் 1875-ல் 'இராவ் பகதூர், என்ற விருதுஅளித்துப் பெருஞ் சிறப்புச்செய்தது.

பிள்ளை அவர்களின் வாழ்வின் பெரும்பகுதி தமிழ்நாட்டிலேயே கழிந்தது. அவர் பதித்து வெளியிட்ட நூல்களே அவரின் வாரிசுகள். வாரிசுகளை நன்கு ஆராய்ந்தால் பிள்ளை அவர்களின் மேதாவிலாசம், கவித்துவம், தலையாய தமிழ்த்தாகம், குருபக்தி முதலியவைகளை அறியலாம்.

அந்த மகானின் சிறப்புச் சேவைகளைபெற நமது கர்ம பூமி கொடுத்துவைக்கவில்லை.

## தமிழ் ஒளி அணைந்தது

தன்னலங் கருதாது- தந்தை போன்ற பரிவோடு- கன்றைப் பிரிந்த தாய்ப்பசுபோலத் தன் ஜன்ம பூமிக்கு ஒருதுளியாவது சேவைசெய்யவேண்டுமென்ற பேராவல் பிடித்துந்த அன்ருெருநாள் ஓடோடிவந்த சி. வை. தா. அவர்கள், தன் ஊர்நிலை கண்டு மனம் இடிந்து போனார். உயிரிருந்தும் உணர்விழந்தவராய்த் தமது உடம்பைத் தாமே சுமககமுடியாது சுமந்துகொண்டு தளர்ந்த நிலையில் தள்ளாடியபடி நீங்கிச் சென்றார், அந்தோ! அன்று ஒரு தமிழ் மகன் தானும் சிறுப்பிட்டியில் இல்லைப்போலும்!

தமிழ் வளர-சங்க நூல்கள் வாழ-நாம் உய்ய ஓடியாடி உழைத்துப் பிரகாசித்த அந்தப் பேரொளி- தமிழ் ஒளி 1901-ம் ஆண்டு தை மாதம் முதலாம் தேதி அணைந்தது! நாவலர் பின் ஒரு சி. வை. தா அதுவும் ஒடுங்கியது. நமது தவம் இருந்தவாறு!

தெய்வத் தமிழ்ச் சங்கந்
தேய்ந்தும் ரண்டாயிரம்
பின்
உய்யத்தா போதரனும்-
உத்தமனார் மெய்யான
தொல்காப்பி யப்பொருளைத்
தொல்லுலக முட்களிக்க
நல்கினர் தேடி நயந்து.
(தொல்காப்பியப் பொருள்-
தொல்-பொருளதிகாரம்)

## காதல் கதைகள்

தற்காலத்தில் எழுதப்படும் காதற்கதைகள், உடல் உறவையே பிரதானமாகக் கொண்டு எழுதப்பட்டு வருகின்றன. ஆனல் கு. ப. ரா.வோ, காதல் என்பது உடல் உறவிற்கு அப்பாற்பட்டது என்பதை அநேக கதைகளில் கலையுணர்வோடு எடுத்துக் காட்டியிருக்கிறார்.

ந. சிதம்பர சுப்பிரமணியன்

●

## வாழ்க்கை

ஒன்று நாம் மேன்மையுற்றவர்களாக வாழ வேண்டும், அல்லது அழியவேண்டும்.

-மாஜினி

சிறுவர் பாடல்:

## கோவில் கட்டுவோம்

கோவில் கட்டி ஆடுவோம்
கொடிகள் கட்டி மகிழுவோம்

பூமா பாட்டுப் பாடு நீ
போடு மீனு தாளம் நீ

செல்வன் மேளம் அடிப்பான்
சேகர் குழலை ஊது நீ

மணியைக் கிலுக்கு நாதன் நீ
மந்திரம் சொல்கிறேன் நானிங்கு

பார்க்க வாற பேருக்கு
பாதிப் பாதி மோதகந்தான்.

- வ. கோவிந்தபிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமுத்திரம் சமாதானப் பிராந்தியமாக முடியுமா?

க. கனகராசா
பி. ஏ. (புவியியல் சிறப்பு)

71.92 மில்லியன் சதுரக் கிலோ மீற்றர் பரப்பைக் கொண்ட உலகின் மூன்றாவது பெரிய நீர்ப்பரப்பான இந்து சமுத்திரப் பகுதியைச் சமாதானப் பிராந்தியமாக்க முடியுமா? என்பது உண்மையிலேயே விடைகாணமுடியாத ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகும். ஏனெனில் இது ஒரு தனி மனிதனால் நிறைவேற்றக்கூடிய காரியமன்று. ஆசியா, ஆபிரிக்கா அவுஸ்திரேலியா ஆகிய மூன்று கண்டங்களையும் அவற்றுடன் சேர்ந்த தீவுக் கூட்டங்களையும் ஒரே தலைவிதியின்கீழ் கொண்டுவரும் இந்துசமுத்திரத்தைச் சூழ சுமார் நாற்பது நாடுகள் வரை உள்ளன. அவை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளாக இருப்பது மட்டுமல்லாமல் உலகின் மொத்தச் சனத்தொகையில் மூன்றில் ஒருபங்கையும் கொண்டுள்ளன. இச் சூழ்நிலையில் சமாதானப்பிராந்தியமென்பது எவ்வளவு தூரம் சாத்தியமாகக்கூடிய விடயம் என்பதைநாம்தர்க்க ரீதியாகத்தான் அலசவேண்டும்.

இந்து சமுத்திரத்தில் வல்லரசுகளுடன் போட்டாபோட்டி இன்றுநேற்று ஏற்பட்டதொன்றல்ல பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது என்பதை வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்க்கும்போது நாம் கண்டு கொள்ளலாம்.

## மேலைத்தேசச் சுரண்டல்

சிறந்த வர்த்தகக் கப்பற் போக்குவரத்துப் பாதையாக இருக்கும் இப்பகுதி பதினைந்தாம் நூற்றாண்டளவில் மேலைத்தேச நாடுகளின் பொருளாதாரச் சுரங்கங்களாக இருந்திருக்கின்றன. அதாவது கைத்தொழில் வளர்ச்சியடையாத காலத்தில் அனேகமான மேலைத்தேச நாடுகள் இப்பகுதி நாடுகளைச் சுரண்டியே தமது பொருளாதாரத்தை வளர்த்துக்கொள்ள என்று முற்பட்டனவே அன்றிலிருந்தேஇந்து சமுத்திரத்தில் வல்லரசுகளின் போட்டாபோட்டி ஆரம்பமானது என்ற உண்மையை யாராலும் மறுக்கமுடியாது. ஆகவே சில நூற்றாண்டுகளுக்கு முந்திய ஆரம்பமாகவேண்டிய இக்கருத்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரம்பமாவதற்கும் சில காரணங்கள் உண்டு. அதாவது ஆரம்பகாலத்தில் இப்பகுதி நாடுகள் யாவும் அடிமைத்தளையில் கட்டுண்டு கிடந்தமையினால் இதுபற்றிச் சுயமாகச் சிந்திக்கமுடியவில்லை.

## தலையசைப்பது சரிதானா?

ஆனால் இன்றைய நிலையில் இப்பிராந்திய நாடுகள் யாவும் சுதந்திரம்பெற்றுச் சுயமாகச் சிந்திக்கத் தொடங்கியபின்னர் இந்து சமுத்திரத்தைச் சமாதானப் பிராந்தியமாக்கவேண்டும் என்று கோஷம் எழுப்பும்போது. அவற்றுக்குச் சார்பாக வல்லரசுகள் தலையசைப்பதுஉண்மையிலேயேமனவிருப்பத்துடன் அசைக்கின்ற அசைவா என்பது கேள்விக்குறியே. காரணம் இன்றைய பொருளாதார அமைப்பில் தேயிலையில் 77%மும் கோப்பியில் 22%மும் பருத்தியில் 22%மும் ரப்பரில் 35%மும் ஏனைய இரும்பு, நிலக்கரி, செப்பு, தகரம் என்பவற்றையும் இப்பிரதேச நாடுகள் கூடுதலாக உற்பத்தி செய்த போதும், இன்று உலகை ஆட்டிவைக்கும் சக்திவாய்ந்த பொருளான நில நெய்யில் 61%மும் இப்பகுதியிலேயே தேங்கிக்கிடக்கின்றன, எனவே இவற்றைவிட்டுப் பிரிய மனமில்லாத வல்லரசுகளின் ஈடுபாடு நாளுக்குநாள் அதிகரித்து வரும்போது சமாதானப்பிராந்தியம் எனும் கூற்று உண்மையிலேயே கனவாகிவிடுமோ என்றுகூட எண்ணத்தோன்றுகின்றது.

## சமாதானப் பிராந்திய தோற்றமும்வளர்ச்சியும்

இந்து சமுத்திரம் சமாதானப் பிராந்தியமாக்கப்படவேண்டும் என்ற கருத்து அனேகமாக 1960-ன்பின்னரே துளிர்விட ஆரம்பித்தது எனலாம். அதுவும் பிராந்தியத்தின் கேந்திர நாடான இலங்கையே இதற்கான வித்தைப் போட்டது என்று கூடக் கூறலாம். 1964ம் ஆண்டு எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் இரண்டாவது உச்சி மகாநாட்டில் ஆபிரிக்காவை அணுவாயுதமற்ற பிரதேசமாக்கவேண்டும் என்று ஆபிரிக்கத் தலைவர்கள் பேசியபோது அணுவாயுதமற்ற பிரதேசம் எனும் கருத்து இந்துமாகாசமுத்திரம் முழுவதையும் உள்ளடக்கும் வகையில் விஸ்தரிக்கப்படவேண்டுமென இலங்கைப் பிரதமர் ஆலோசனை கூறி இதுபற்றிய கருத்தை உலக அரசியல் மேடையில் ஒலிக்கவிட்டதன் மூலம் இக்கருவை உருவாக்கினார். ஆனால் பெயரளவில் அணுவாயுதமற்ற பிரதேசம் எனப் பிரகடனப்படுத்திவிடவோ அல்லது வல்லரசுகளின் போட்டாபோட்டியைத்தடுத்துவிடவோ முடியாதென்பதும் மற்றுமொருஉண்மையாகும்.

## எல்லா நாடும் அணிசேரா நாடா?

ஆகவே சர்வதேச கொந்தளிப்பைக் குறைத்து, அதன் மூலம் சர்வதேச பாதுகாப்பை உருவாக்குவது, இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஓர் இந்து சமுத்திர சமுதாயத்தை உருவாக்குவது போன்ற பல நன்மைகளைக் கருதி எடுக்கப்பட வேண்டிய ஒரு நடவடிக்கையே சமாதானப் பிராந்திய முயற்சி என இலங்கை எப்போதும் கருதிவந்தது. ஆனால் இந்து சமுத்திரப் பிரதேசத்திலுள்ள சகல நாடுகளும் அணிசேரா நாடாக இருக்கவில்லை. இருந்தும் அணிசேரா இயக்கத்தில் அங்கம் வகிக்காத இப்பிராந்திய நாடுகள் மட்டுமல்லாமல் ஏனைய சீனா, ஜப்பான் போன்ற ஆசிய நாடுகளும் இக்கொள்கைக்குப் பலத்த ஆதரவளிப்பதோடு முன்னர் கூறியதுபோல மேலைத்தேய வல்லரசுகளும் இக்கொள்கைக்குச் சார்பாகத் தலையசைத்தவண்ணமே இருக்கின்றன.

## சமாதானம் எதற்கு?

இருந்தும் இந்து சமுத்திரம் சமாதானப் பிராந்தியமாக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையை முதல் முதலாக 1970-ம் ஆண்டு சாம்பியாவின் தலைநகரான லூசாக்காவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் மகாநாட்டில் பிரேரிக்கப்பட்டு ஆராயப்பட்டதோடு விட்டுவிடாமல் 1971-ம் ஆண்டு நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மகாநாட்டிலும் அதன் தலைவரால் பிரேரித்துப் பேசப்பட்டு புத்துயிர் கொடுக்கப்பட்டது. இக்கொள்கையே அதே ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் 26-வது கூட்டத்தொடரில் இலங்கைப் பிரதமரால் கொண்டுவரப்பட்டு சமாதானப் பிராந்தியமாகப் பிரகடனம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. அதே வேளையில் இதன் அடிப்படை அம்சங்களும் விளக்கப்பட்டன. அவற்றில் (1) இந்து சமுத்திரத்தை அணுவாயுதமற்ற பிராந்தியமாக்கல், (2) வல்லரசுகளின் இராணுவத் தலையீட்டைத் தடுத்தல், (3) வல்லரசுப் போட்டியை இப்பிராந்தியத்தில் குறைத்தல், (4) சமுத்திரத்தைச் சூழவுள்ள நாடுகள் தமது பிரச்சினைகளை வல்லரசுகளின் தலையீடின்றித் தாமே தீர்த்துக்கொள்ளல், (5) இவற்றின் மூலம் சமாதானப் பிராந்தியத்தை உருவாக்கல், போன்ற அம்சங்கள் முக்கியமானவை.

இந்து சமுத்திரம் சமாதானப் பிராந்தியம் என்னும் யோசனை முதல் முறையாகத் தெரிவிக்கப்பட்ட போது இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின் இந்து சமுத்திரத்தில் வல்லரசுகளின் ஆதிக்கம் ஆரம்பக் கட்டத்தில் இருந்தமையால் இது ஒரு சுலபமான விடயம் என்றே எண்ணத் தோன்றியது. ஆனால் அதைத் தொடர்ந்து நடந்து முடிந்த, நடந்து கொண்டிருக்கின்ற சில சம்பவங்கள் முன் கூறிய சமாதானப் பிராந்தியம் என்னும் கொள்கையின் அடிப்படை அம்சங்களைக்கூடத் தகர்த்தெறிந்து விட்டன என்றே கூறலாம்.

## எண்ணைத் தேவையா? சமாதானத் தேவையா?

ஆரம்ப நடவடிக்கையாக தியூகோகாசியாவில் அமெரிக்கா அதன் கடற்படைத் தளத்தை அமைத்த போதே இந்து சமுத்திரம் அணுவாயுதமற்ற பிரதேசம் என்பது வெற்றுத் தாளில் எழுதப்பட்ட வெறும் வார்த்தைகளாக்கப்பட்டன. தொடர்ந்து 1971ம் ஆண்டு நடைபெற்ற வங்காளதேச யுத்தத்தின் போது அமெரிக்காவின் ஆறுவது கடற்படை இந்து சமுத்தரத்தினுள் பிரவேசித்ததும், அதற்கு எதிர் நடவடிக்கையாக சோவியத் யூனியன் தனது கடற்படைகளை அங்கு அனுப்பிய போதும் இந்து சமுத்திரம் சமாதானப் பிராந்தியம் எனும் கொள்கையின் அடிப்படை அம்சங்கள் யாவும் காற்றில் பறக்கவிடப்பட்டன. இதற்கு முன்னர் வல்லரசுப் போட்டி நிலவும் சந்தர்ப்பத்தில் அவை தங்களது இராணுவப் . பிரசன்னத்தை மேலும் பெருக்கி விரிவாக்க வேண்டுமானால் கரையோர நாடுகளுடன் கலந்தாலோசனை செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தும், 1968-ல் சோமாலியா, ஓமான், ஈராக் என்பன தமது துறைகளில் சோவியத் கடற்படைக்கு தங்கும் வசதி அளித்ததன் மூலம் தமமைத் தாமே அழித்துக் கொள்ளும் நிலைக்கு இந்து சமுத்திர சமுதாய நாடுகள் தள்ளப்பட்டன. அது மட்டுமல்லாமல், தங்கள் தங்கள் எண்ணைக் கம்பனிகளைப் பாதுகாக்க வேண்டும் எனக் காரணம் காட்டி அமெரிக்கா, சோவியத் யூனியன், ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளும் தமது கடற்படைகளை இங்கு அனுப்பி வைத்தன.

## உடனடி இயக்கத்துக்கு வழி!

தொடர்ந்து கம்பூச்சியாவினுள் வியட்நாமின் பிரவேசம், ஆப்கானில் சோவியத்தின் தலையீடு, ஈரானியப் புரட்சி, என்பன எல்லாம் தருணம் பார்த்திருந்த வல்லரசுகளுக்கு நல்லதொரு நிலையைத் தான் தக்க சமயத்தில் அமைத்து விட்டன. எனவே இந்து சமுத்திரம் தற்போது ஒரு இராணுவத் தளமாகக் காட்சியளிப்பதற்கான வாய்ப்புக்களைக் கூட இதைச் சூழவுள்ள நாடுகளே ஏற்படுத்திக் கொடுத்துள்ளன என்று கூறினாலும் மிகையாகாது இந்நடவடிக்கைகளினால் சமாதானம் மட்டுமல்ல அதன் அடியில் உள்ள இயற்கைச் செல்வங்கள் கூட பாதிக்கப்படுகின்றன என்பதையும் யாவரும் அறிவர்.

## வாழ்வா? மாழ்வா?

எனவே மூன்றும் உலக நாடுகள் என அழைக்கப்படும் மிகக் குறைந்த தேசிய வருமானத்தைக் கொண்டு அபிவிருத்தி அடைந்து வரும் பெரும்பாலான இந்து சமுத்திரக் கரையோர நாடுகள் தமது வறுமை நிலையில் இருந்து விடுபடும் வரை, தமக்கிடையே உள்ள பகைமைகளை மறந்து சமாதானமாக வாழப் பழகும் வரை, உள்நாட்டு அரசியல் பிரச்சினைகளில் வல்லரசுகளினதோ அல்லது அயல் நாட்டினதோ தலையீட்டைத் தடுக்க முற்படும் வரை, தமது மொத்தத் தேசிய வருவாயில் பெரும் பங்கை அபிவிருத்தித் திட்டங்களில் இட்டுச் செல்வதை இராணுவத் தேவைகளுக்காகச் செலவிடுவதை நிறுத்தும் வரை, வல்லரசுகள் இப்பிராந்திய நாடுகளிடையே பகைமையைத் தூண்டி விட்டு தாம் உற்பத்தி செய்யும் யுத்த ஆயுத உபகரணங்களுக்கு நிரந்தர

(6-ம் பக்கம் பார்க்க

# ஆக்கரீதியான பாதை அழிவு ரீதியாக மாறியதால் உலகம் அமைதி இழந்துள்ளது

ஆர் குலசேகரம்

விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் உலகின் அபிவிருத்திக்குப் பயன்படுத்துவது குறித்து நீண்டகாலமாகப் பேசப்படுகிறது.

உலகம் இன்று எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இதுவே ஒரே வழி.

உலகம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் ஏராளம். வறுமை, பட்டினி, வேலையில்லாத்திண்டாட்டம், நோய், சூழல்பாதுகாப்பு, எரிபொருள் பிரச்சினை, இயற்கை அழிவு இன்ன பிறவற்றை முக்கியமாகக் கூறலாம்.

இன்றுள்ள நிலையில் அபிவிருத்திநோக்கங்களுக்காகவிஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்துவது அவசியம். இந்த விஷயத்தில் ஐ. நா. பேரக்கறை காட்டி வருகிறது.

இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாயின் சகல நாடுகளும் ஒத்துழைக்கவேண்டும். இன்றைய உலகைப் பார்த்தால் ஒருபுறம் பின்தங்கிய நாடுகள், மறுபுறம்முன்னேறிய நாடுகள். பின்தங்கிய நாடுகளின் இருள்சூழ்ந்த நிலையை உலகம் நன்கறியும்.

முன்னேறிய நாடுகளின் அபிவிருத்தியோ குருட்டாம் போக்கில் செல்வதனால், அது மனிதகுலத்தைப் பூண்டோடு ஒழித்துவிடுமோ என்று அச்சம் ஏற்பட்டுள்ளது. அவை ஆயுதப் போட்டியில் கால்வைத்துள்ளன.

ஐ. நா. வின் மதிப்பீடு ஒன்றை இங்கு சுருக்கமாகக் காணலாம்.

ஒரு போர் வீரனுக்காக உலகம் ஒரு நாளைக்குச் செலவிடும் பணம் 60 பிள்ளைகளின் கல்விச் செலவைக் காட்டிலும் அதிகம்.

உலகின் ராணுவச் செலவு, மனிதகுலத்தின் சுகாதாரச் செலவைக் காட்டிலும் 2.5 மடங்கும் கல்விச்செலவைக் காட்டிலும் 1.5 மடங்கு அதிகமாம்.

அமெரிக்கா அடுத்த ஐந்தாண்டுகளில் ராணுவச்செலவுக்கென ஒதுக்கியுள்ள 14,000 கோடி டாலர்கள் உலகமக்களனைவருக்கும் 10 வருடத்துக்கு ரொட்டி வழங்கப் போதுமானது.

யுத்தம் பொருளாதாரம் பின்தங்கிய நாடுகளின் உணவையும் பாடசாலைகளையும் பறித்துள்ளதோடு, வளர்ச்சி பெற்ற நாடுகளில் வேலையில்லாத்திண்டாட்டத்தையும், பணவீக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆக்கரீதியான பாதை அழிவு ரீதியான பாதையாக மாறியதால் உலகம் அமைதியிழந்துள்ளது.

முன்னேறிய நாடுகள் தமக்குள் போட்டியையும் பகைமையையும் அவநம்பிக்கையையும் விடுத்து ஒத்துழைத்தால் கிடைக்கும் பலன்கள் மகத்தானவை. உதாரணத்துக்கு ஐரோப்பாவின் மேற்கும் கிழக்கும் ஒத்துழைத்தால், மேற்கில் 20 லட்சம் பேருக்கு வேலை கிடைக்கும். நம்பகமான எரிபொருள் மூலப்பொருள் விநியோகம் நடைபெறும். கிழக்கு தனது மனித சக்தி பற்றாக்குறையைத் தீர்த்துக்கொள்ளும் என்று ஐரோப்பியப் பொருளாதார நிபுணர்கள் கூறுகிறார்கள்.

இந்நாடுகள் விஞ்ஞான, தொழில் நுட்ப ஒத்துழைப்புகளை மேற்கொண்டு சமாதானப் பொருளாதாரத்தை நிலைப்படுத்தினால் [illegible] பேறுகள் குறித்து நிபுணர்கள் நூற்றுக்கணக்கான ஆதாரங்களைத் தந்துள்ளனர்.

உலகின் பசிக்கும் வயிறுகளுக்கு உணவிடவும், நோய் தீர்க்கும் மருத்துவ, மருந்து வகைகளின் அபிவிருத்திக்கும் எரிபொருள், மூலப்பொருள் பற்றாக்குறைத் தீர்வுக்கும், விண்வெளி, சமுத்திர ஆய்வுக்கும், அபிவிருத்தி அடைந்த நாடுகள் தாம் தமது விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்த வேண்டும். இதில் உலகின் வடக்கும் கிழக்கும் தெற்கும் மேற்கும் பங்குகொண்டு உழைக்கவேண்டும். இப்பிரச்சினைகள் யாவற்றுக்கும், ஏன் இனி வரப்போகும் பிரச்சினைகளுக்கும் கூடத்தீர்வு காணமுடியும், ஆனால் அது உலகளாவிய சமாதானத்தின் அடிப்படையில்தான்.

உலகில் இன்று இணக்க அமைதி என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. ராணுவ, அரசியல் சம்பந்தப்பட்ட விஷயங்களில்தான் இது அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. விஞ்ஞான, தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத் துறையிலும் இந்த அமைதி ஏற்படவேண்டும். [illegible] வம் பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய நாட்டில் - கலையும் யோகசாதனமும்

> ஓர் ஓவியன் அல்லது சிற்பி எதனை உருவாக்க விரும்புகிருேனே அதனை அக்கலைஞன் மூளையில் முதற்கண் அமைத்தல்வேண்டும்.
>
> மனதில் எவ்வித அவ்வியமும் அவாவுமின்றி தூய்மையான மனோ நிலை இருந்தால் இம் மேதினியில் அரிய பெரிய காரியங்களைச் சாதிக்க இடமுண்டு.
>
> பேருணர்வே மேதாவிகளிடம் சிறப்பாகக் காணப்படுகிறது.

ஆங்கில மூலம்:
**கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி**

தமிழாக்கம்:
**வரலாற்றுவாணர்
வை. முத்துக்குமாரசுவாமி**

IOனசாத்திரத்தின் உள்ளமைந்த உண்மைகளைச்செயல் முறைக்குக்கொண்டுவருவதே யோகசாதன நியமமாதலால் அஃது இந்திய பண்பாட்டின் முழு வளர்ச்சியையும் நெறிப்படுத்தியுள்ளது. யோகம் என்பது ஒரு மனோ சாதனை குறிப்பாக மனத்தை ஒரு வழி நிறுத்தற்கும் முழு அவதானத்தையும் குறிப்பிட்ட ஒன்றில் மட்டும் வைத்திருக்க உதவுகிறது. எனினும் இவ்வழிநின்று சீவன் சிவனுடன் இணைவதையே மேலான நோக்கமாகக்கொண்டது. ஆயினும் யோக சாதனையின் வழிவகைகள் மனத்தின்கண் எழும் மற்றைய இயக்கங்களின் வெற்றிக்கும் பொதுவானவையாகவே கையாளப் படக்கூடிய தன்மைவாய்ந்தன.

பதஞ்சலி முனிவர் இயற்றிய யோக நூலில் (ii) (1-4) பின்வருமாறு பகருகிறார்.

அவதானம் (தாரணம்) என்பது மனத்தை ஓர் இடத்தில் பதித்தலாகும். தியானம் என்பது மனம் பதித்து நிற்கும் பொருளில் இடையருத உணர்வுப் பெருக்கம் எனலாம். தியானத்தில் உள்ள பொருளிலே மட்டும் முழு உணர்வும் நிலைத்துவிளங்க, தன்னைப் பற்றிய உணர்வு சற்றேனும் இல்லாத கட்டுப்பட்ட நிலையே சமாதியாகும். அவை மூன்றின் தொகுப்பே தொடர்புபட்டு நிற்கும் சன்யாமம் என்னும் நிலை, இந்நிலையே காண்பவரும் காணப்படுபவரும் ஐக்கியப்பட்டுள்ள உயர்நிலை.

இந்தியக் கலை யோக சாதனையுடன் மூன்று விதமாகத் தொடர்புள்ளது. அவையாவன: (1) தெய்வீகக் குறிக்கோள். (2) அவை குறித்த முறை. (3) இறுதி நோக்கம் என்பன. ஈண்டு இந்தியக் கலையின் முறைகளையும் அதன் நோக்கங்களையும் எடுத்துரைப்பாம். ஓர் உருவக் கிரியையானது சுருக்கமாக யோகசாதனையின் குணநிசயத்தை நன்கு விளக்குகின்றது. அது சுமார் கி. பி. 12-ம் நூற்றாண்டில் உள்ள தந்திர நூல்களிலிருந்து எம். ஃபௌச்செர் என்பவரால் சுருக்கமாக்கப்பட்ட புத்த பிரானின் சிலைவடிவம். பகுதி 2 (Iconographic Bouddique-Part II) என்னும் நூலாகும். அதில் குறிப்பிட்டுள்ள முறைகள் இன்று காணப்படும் தந்திர இலக்கியத்திலும் பார்க்க பழமைவாய்ந்தன. இந்நூல்களில் தீவிரமான கட்டுப்பாடுகள் உள்ளன. இவைகளின் உள் நோக்கத்தை மக்கள் உணராமல் வெளிக்கிரியைகளைமட்டும் அனுஷ்டித்ததினால் இவற்றில் காணப்படும் முக்கிய உண்மைகள் சம்பந்தப்பட்ட கலை தேய்வடைந்தநிலையில் உள்ளன. அது எவ்வாறாயினும் இந்நூல்களில் இருந்து கலைக்கும் யோகசாதனைக்கும் உள்ள தொடர்பை நாம் உய்த்துணரக்கூடியதாக உள்ளது.

ஒரு சாதகன் அல்லது மாந்திரீகன் அல்லது யோகி தன் உடலைக் குளித்துச் சுத்தமாக்கிக்கொண்டு தோய்த்துலர்ந்த ஆடைகள் அணிந்து சந்தியாவந்தனம் செய்தபின் தனிமையான இடத்தை நாடி அங்கு அமரவேண்டும் அடுத்து அவன் ஏழுவகையான சடங்குகளை முறையே புரிதல்வேண்டும். முதலாவது சடங்கு அவன் பல புத்தபிரான்களையும், போதிசத்துவர்களையும் மானசீகமாக அழைத்து உண்மையாகவோ அல்லது கற்பனையிலோ பலப்பல மலர்களை அவர்கள் திருத்தாள்களில் சாற்று மற்றைய உபசாரங்களும் செய்யவேண்டும்,

சைவமுறைப்படி அபிஷேகம், அலங்காரம், தூபாராதனை, தீபாராதனை, நிவேதனை என ஐந்து வித உபசாரங்கள் அல்லது சடங்குகள் உள்ளன.)

முடிவாக சாதகன் (கற்பனையில்) மேற்படி தான் செய்த சடங்குகளினால் ஈட்டிய புண்ணியங்கள் யாவற்றையும் பல்கோடி ஜீவ பிராணிகளுக்கு அர்ப்பணித்தல் வேண்டும். பின்பு தன்னைப் பேரன்புச் சொரூபியாகவும், அளவிலாக் கருணை வடிவினனாகவும், அளப்பரும் அனுதாப சொரூபியாகவும், சம்பூர்ண சமதிருஷ்டி வடிவினனாகவும் பாவனைசெய்ய வேண்டும். அதன்பின்பொருள்கள் யாவற்றுள்ளும் ஊடுருவி நிற்கும் ஆதித்தூய பொருளைப் பற்றி அல்லது 'இன்மை' பற்றி மனத்தில் தியானித்துத் தன்னை ஒருமைப்படுத்தவேண்டும். இதை விளக்குமுகமாக பஞ்சபூதங்கள் ஆவன பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பன முறையே இலகுவாக பூமி, நீர், தீ (அக்கினி), கால் (காற்று), வெளி என உரைக்கலாம். இந்த ஐந்து பூதங்களின் வழி முதற்பொருள் ஒன்றே ஒன்றுதான். வெட்ட வெளியை ஒருசாதகன் அல்லது யோகி தியானப் பொருளாகக் கொண்டால் 'நான்', 'எனது' என்னும்சிந்தனைகள் -அவ்வியம் அழிந்துவிடும். அப்படியான பக்குவ நிலையில்ஒருவன் எந்தத் தெய்வத்தை உருவாக்க விழைகின்றனோ அந்த உருவத்துடன் அவன மனம் லயித்து ஒன்றி நிற்பது அவசியமாகும். அவ்வாறு நினைப்பவனும் நினைக்கும் பொருளும் மனம் ஒன்றி நின்றால் ஒழிய அத்தெய்வ பிரத்தியட்சம் ஆகாது. தெய்வீகத்தன்மை நிழலைப்போலவே அந்த யோகிக்குத் தென்படுகிறது அடியார் பலர் குழ்ந்துள்ள தெய்வச் சித்திரத்தை ஒரு சாதகன் பயன்படுத்துவது அருமையினும் அருமை. ஒரு சிற்பியோ, ஓர் ஓவியனோ ஓர் உருவத்தை 'மனக்கண்ணால் நிலை நிறுத்திய பின்னரே, அதனைக் கற்சிலையாகவோ, உலோக விக்கிரமாகவோ அல்லது சித்திரமாகவோ, ஓவியமாகவோ அமைக்கின்றான்.

கலைக்கும் யோகசாதனைக்கும் வேறு ஓர் ஒப்புமை உளது. அது நித்திரையில் அல்லது கனவுகளில்பெறப்படும்அறிவை ஆதாரமாகக் கொள்ளுதல் ஆகும். யோக சாதனை செய்யும் பொழுது தோன்றும் தடைகள் பற்றிப் பதஞ்சலி முனிவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'கனவில் அல்லது நித்திரையில் அறியப்படும்அறிவை ஆதாரமாக நசம் ஆதாரமாகக் கொள்ளலாம். அதைஅப்படியே அக்கினிபுராணம் (43-ம் அதிகாரம்) பின்வருமாறு விரிவாகக் கூறுகின்றது:

'ஓர் உருவத்தைஅமைக்கும் அருங்கலைஞன்- தனது பணியைத் தொடங்குமுன், முறைப்படி உள்ள சடங்குகளினால்தன்னைச்சுத்தம் செய்தபின்பிரார்த்தனை இது!

'எல்லாத் தெய்வங்களுக்கும் மேலான தேவாதி தேவரே! அடியேனுக்குக்குருவாக இருந்து அடியேன் உன்னும் பணியைப் பழுதுறமல் முடிக்கும் வழிவகைகளைக் கனவுமூலம் எனது நித்திரையில் தெரிவிப்பீர் மகா பிரபு!'

ஓர் ஓவியன் அல்லது சிற்பி எதனை உருவாக்க விரும்புகிருேனே அதனை அக்கலைஞன் மூளையில் முதற்கண் அமைத்தல் வேண்டும். இது முக்கிய அடிப்படையான தி.

'பேர்ண் ஜோன்ஸ்' என்னும் பேரறிஞர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

'ஒரு கலைஞன் தனக்குமுன் உள்ள ஓர் உருவத்தைப் பார்த்தோ, இயற்கையைப் பிரதிமை செய்யவோகூடாது. அவ்வகையான நினைவில் இருந்து உருவாக்கப்படும் சித்திரம் வெறும் அலங்காரச்சித்திரமேயாகும். வங்காளநாட்டில் இன்று காணப்படும் ஓவியக்கலை, முகலாய ஓவியத்தால் உந்தப்பட்ட பழைய இந்தியக் குறிக்கோள்கொண்டுள்ளது. (வங்காளநாட்டைச் சேர்ந்த இரவீந்திரநாத் தாகூரும் அவர்சகோதரர்கள் அபனீன்றநாத் தாகூர், ஜாஜானென்றநாத் தாகூர் என்பவர்கள் ஓவியக் கலைஞர்கள். இவர்கள் கல்கத்தாவில் வங்காள ஓவியக் கலையைத் தமது கலைக்கல்லூரி மூலம் வளர்த்தனர்.)

இஷ்டதெய்வத்துக்கு எப்படி நாம் ஆராதனையுடன் வந்தனை செய்து பூசனைகள் ஆற்றிவருகின்றோமோ அதேபோன்றுதான் கலைஞன் பின்பற்றவேண்டிய வழியாகும். அவ்வாறு பின்பற்றிவந்தால் அக்கலைஞன் ஈட்டக்கூடிய நற்பயன்கள் எண்ணில் அடங்கா ஏனெனில் உண்மைக் கலைஞன் ஓர் ஓவியத்தை அமைப்பவனால் அவன் அதனைக் கலைக்கண்ணுடன் உள்ளொளியுடன் பார்க்கின்றான் இத்தக் கருத்துவிளக்கப் சாதாரண உணர்வுக்கு மேலானது. அப்பேருணர்வே மேதாவிகளிடம் சிறப்பாகக் காணப்படுகின்றது. பாரசிக நாட்டில் ஆவாட் (Awad) என்னும் சொல் ஒரு கவிஞன் எதுகை மோனையுடன் ஒரு பாட்டுஅமைத்தலைக் குறிக்கும். ஆயினும் பேருணர்ச்சியுடனும் சிந்தனைச்செறிவுடனும் அமைக்கப்படுவதுகவிதை. அது Amad என்று சொல்லப்படுகிறது.

"வியாசமுனிவர் கணேசப் பெருமானிடம் தான் கூறும் சுலோகங்களை இடையருது தொடர்ந்து எழுதும்படி கட்டளை செய்தனர். ஒரு மேடைப் பேச்சாளன் தன்னை மறந்து ஆவேசத்துடன் சொற்பொழிவு ஆற்றும்பொழுதுதான் அவனுடைய முழு ஆற்றலையும் நாம் அறியக்கூடியதாக [illegible] அந்த உச்ச [illegible] தரம் செவ்வுவாகக் குறைந்துவிடும். மிகுந்த உற்சாகத்துடன் சொற்பொழிவு ஆற்றிய பேச்சாளர் கூறியவற்றைத் திரும்பவும் கூறும்படி கேட்டால் அது அவர் நினைவில் இருப்பதில்லை. அஃது யாவரும் அறிந்த உண்மையே. மகாபாரத யுத்தம் முடிந்த பின் கிருஷ்ணபகவானைப் பகவத்கீதையைத் திரும்பக் கூறும்படி கேட்டபொழுது அதனை அவர் கூறமுடியவில்லை, அதனை அவர் முற்றிலும் மறந்துவிட்டார். நமது ஆத்மாவில் உள்ள தீயை நாம் விரும்பியபொழுது தூண்டமுடியா. அதனை ஓர் அளவாவது தூண்டவேண்டுமானால் மனதில் எவ்வித அவ்வியமுமின்றித் தூய்மையான மனோநிலையுடன் இருந்தால் இம்மேதினியில் அரிய பெரிய காரியங்களை சாதிக்க இடமுண்டு.

யோகசாதனை அதனையே கற்பிக்கிறது. கலை கற்பிக்கின்றதும் அதுவேயாகும்.


'ஒவ்வொரு யுகத்திலும் அழகினைப்பற்றிக் கவி புனைவோர் பவ்வியமாக மமகாரம் இன்றி விடுதலை பெற்றவரேயாவர், கலைஞன் ஒருவனின் கற்பனையைப்பற்றி. ஓர் இந்தியன் என்ன கருதுகிறான்? அது பரவசநிலை என்றே உன்னுகிறான். ஒரு சிறந்த கவிதையை இரசிக்கும்பொழுது எங்கள் இதயங்களில் உள்ள பேரொளியையே நாம் உணருகின்றோம்' என்று தத்துவஞானியாகிய அபிவைகுப்தபாத சார்யா நவிலுகின்றார்.

(தொடரும்)

## இந்து சமுத்திர ...

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

மான சந்தையை இப்பகுதி நாடுகளில் பெறும் நோக்கத்தைக் கைவிடும் வரை, இந்து சமுத்திரம் சமாதானப் பிராந்தியம் என்பது வெறும் வார்த்தைகளாகவும் எழுத்துக்களாகவும் மட்டுமே இருக்கும் என்று கூறுவதைத் தவிர வேறு எதையும் கூற முடியாது.




நூல்:- 'ஓம் கணேச' (இறைவனின் சாந்தநிலை)
(AUM GANESA-The Peace of God) by Ratna Navaratnam
வித்தியா பவனம்,
341, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.

ஓம் கணேச என்னும் நூலின் ஆசிரியரான திருமதி ரத்தின நவரத்தினம் ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் தமிழ் என்னும் மும்மொழிகளிலும் வல்லுநர். ஆங்கிலத்தைச் சிறப்புப் பாடமாக எடுத்துச் சென்னை சர்வகலாசாலையிலிருந்து M.A. பட்டம் பெற்றவர். பின்னர் திருவாசகம் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பித்து அண்ணாமலைச் சர்வகலாசாலையிலிருந்து (M.Litt.) பட்டம் பெற்றவர்.

திருவாசகம் பற்றி மேலும் ஆராய்ச்சிசெய்து 'திருவாசகம் காட்டும் பக்திநெறி' (Tiruvacakam - The Hindu Testament of Love) என்னும் நூலை எழுதினார். இதனைத் தொடர்ந்து 'தேவகுமாரன் கார்த்திகேயன் காட்டும் ஞானநெறி' 'Kasthikeya-The Divine Child-The Hindu Testament of Wisdom' என்னும் நூலையும் எழுதினார். இவ்விரு நூல்களையும் உலகப்பிரசித்திபெற்ற வித்தியாபவன் என்னும் நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்திய கலாச்சாரத்தின் அறிவை உலகெங்கும் பரப்பும் நோக்குடன் கெ. எம். மூன்ஷியால் 'வித்தியாபவன்' பம்பாயில் நிறுவப்பட்டது. இதன் கிளைகள் சென்னை, டெல்லி முதலிய இந்திய நகரங்களிலும் லண்டனிலும் தாபிக்கப்பட்டுள்ளன. இத்தாபனம் திருமதி நவரத்தினம் அவர்களின் நூல்களை வெளியிட்டிருப்பது பற்றி [illegible] [illegible] நூல்களை எழுத [illegible] யோக சுவாமிகளின் நெருங்கிய உறவு [illegible] [illegible] நூல் [illegible] [illegible] அவர்களைப் பற்றி ஆங்கிலத்தில் ஒரு நூலை வெளியிட்டுள்ளார் (Saint Yogaswami and the Testament of Truth)

'ஓம் கணேச என்னும் நூலில் பல கோணங்களிலிருந்து கணேசரைப் பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. கணேசர் பிரணவ சொரூபம் என்பது எல்லோருக்கும் ஒப்ப முடிந்த கொள்கையாகும். ஔவையார் 'பிரணவப்பொருளாம் பெருந்தகை ஐங்கரன்' எனக் கூறியுள்ளார். பிரணவத்தின் பெருமைதைத் திரியோபநிஷத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:-


'ஓங்காரமே பிரம்மம், ஓங்காரமே இது எல்லாம் என்று (தியானம் செய்யவேண்டும்.) ஓம் என்ற இதுவே 'ஆகட்டும்' என்பதற்கும், 'ஓ! கேள்' என்று கூவிச் சொன்னால் 'கேட்கிறேன்' என்பதற்கும் அறிகுறியாக உள்ளது பிரசித்தம் ஓம் என்று தொடங்கியே ஸாமகானஞ் செய்கின்றனர். 'ஓம் சோம்' என்று தொடங்கி (ரிக்வேத) 'சஸ்த்ர' மந்திரங்களைச் சொல்லுகிறார்கள். ஓம் என்றே அத்வர்யு 'ப்ரதிகரம்' என்னும் மறுமொழியை (ஹோதாவுக்கு) தெரிவிக்கிறார். ஓம் என்றே பிரம்மா அனுமதியைத் தெரிவிக்கிறார். ஓம் என்றே அக்னி ஹோத்திரத்துக்கு அனுமதி (அனுஜ்ஞை) கொடுக்கிறார். (பிரம்மத்தை) வேதத்தை அடையவேண்டும் என்று (வந்த சிஷ்யனுக்கு) அத்தியானம் செய்விக்கத்தொடங்கும் பிராம்மணன் ஓம் என்றே கூறி (ஆரம்பிக்கிறார்) சிஷ்யனும் (அதனால் பிரம்மத்தை) வேதத்தை உள்ளபடி அடையவே அடைகிறான்' இதன் விரிவான விளக்கத்தை மாண்டூக்கியோபநிஷத்தில் காணலாம்.

இங்கு எடுத்தாளப்பெற்றிருக்கும் கணபதி உபநிடதப் மதபேதங்கள் (Sects) தோன்றிய பின்னரே எழுதப்பட்டிருக்கவேண்டும். வேதத்தின்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுபட்டு அறிவை வளர்க்கும் சுவீடன் நல்லொழுக்க இளைஞர்கள்



சர்வதேச நல்லொழுக்க இயக்கம் பற்றி 1964-ம் ஆண்டளவில்தான் நம்மவர்கள் அறிய முடிந்தது. ஆனால் 1851-ம் ஆண்டிலேயே அது ஆரம்பிக்கப்பட்டு விட்டது. ஈ-நோர் அபிவிருத்தித் திட்டம் உருவாகிய பின்னர் நம்மவர்கள் இவ்வியக்கம் பற்றி உணரலானார்கள்.

சர்வதேச நல்லொழுக்க இயக்கம் - மக்களுக்கு உலகத்தில் வளமான, சுதந்திரமான நல்ல பலனளிக்கக் கூடிய வாழ்க்கையை அளித்துக் காப்பாற்றுவதே இதன் குறிக்கோளாகும்.

இவ்வியக்கத்தில் சேருவோர் போதை தரக்கூடிய பானங்களை முழுமையாக எதிர்ப்பதாகும்.

140 வருடங்களுக்கு முன்னர், நல்லொழுக்கமுள்ள இளைஞர்களுக்கு தெரிந்திருந்த "மது" இன்னும் அது எம்மவர்க்குத் தெரியவில்லையே என எண்ணத் தோன்றுகின்றது.

சில நிமிடங்களுக்குப் போதை தரும் "மது" குடும்பத்தையே அழிப்பதை, பலர் உணர்வதில்லை.

பெற்ற பிள்ளைகளும், மனைவியும் கூட, மது அருந்தும் தலைவனை ஏளனம் செய்வதை எண்ணி இரத்தக் கண்ணீர் வடிக்கிறேன்.

இஸ்லாமிய நாடுகளில் மதுவுக்குத் தடை.

இந்தியாவில் காந்திஜி பிறந்த "குஜராத்தி"லும் ராஜாஜி பிறந்த தமிழ் நாட்டிலும் பூரண மதுவிலக்கு.

நடைமுறைக்கு ஒத்துவராத மதுவிலக்கைப்பற்றிப் பேசினால் தேசிய வருமானத்தை பாழடிக்கிறார்கள் என்று எதிர்க் குரல் எழும்பிவிடும்.

மதுவுக்கு அடிமையானவன் அழிவதைத் தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

ஒரு சில இளைஞர்களால் உருவாக்கப்பட்ட நல்லொழுக்க இயக்கம், இன்று 40 நாடுகளில் பரந்து, சுமார் 5 லட்சம் உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

இவ்வியக்கத்தில் இயங்குபவர்கள், பின்வரும் கடமைகளை உறுதிப்படுத்துபவர்களாக இருக்க வேண்டும்.

பரந்த உலகத்தில் ஆண்களையும், மகளிரையும் சேர்த்த சாதி, சமயம், மொழி, சமூகம், அரசியல், வேற்றுமைகள் அற்ற நல்லதொரு சமுதாயத்தை அமைப்பதேயாகும்.

நல்லவராக, உதாரண புருஷர்களாக உறுப்பினர்கள் வாழ்ந்து காட்டி சுயமாக குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டவர்களையும், மருந்துக்குத்தானும் போதை தரும் வஸ்துக்களைப் பாவிப்பவர்களையும், இத்தீய பழக்கத்தில் இருந்து விடுவிக்க முன்வர வேண்டும்.

சகோதரர்கள் போல, நேசித்து மதுபாவிப்பவர்களை அப்பழக்கத்திலிருந்து விடுவித்து அவர்கட்கு முழு ஆதரவையும் நல்கி இயக்கத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மதுவினால் ஏற்படும் தீமைகளை பாடசாலை மாணவர்கட்கு விளக்கி மது ஒழிப்பு இயக்கத்தைப் பரப்ப வேண்டும்.

சட்டவிரோதமாகப் போதை தரும் வஸ்துக்களையும், மது பானங்களையும் விற்பவர்களை தண்டனைக்குள்ளாக்கி மது பாவனைக்கு எதிராக சட்டங்களை ஆதரிக்க வேண்டும்.

சமத்துவம், சகோதரத்துவம் கொண்ட சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

மனித வாழ்க்கைக்கு எல்லா வகையிலும் நட்புக் கொள்ளக் கூடிய சுத்தியும், சகிப்புத் தன்மையும் அன்றும் அமைய வேண்டும்.

உலக மக்கள் மத்தியில் ஒரு நீடித்த சமாதான வாழ்வை அமைக்க உழைக்க வேண்டும்.

இவை அந்தக் குறிக்கோள்களில் சிலவாகும்

இந்த இயக்கம் 40 நாடுகளில் தனது பணியினைச் செய்து வருகின்றது.

"ஒன்றுபட்டு அறிவை வளர்ப்போம், ஒன்றுபடுதல் பலமெனக் காண்போம்" என்ற தாரக மந்திரத்தைக் கொண்டு, கல்வித்துறையில், மகத்தான சாதனை புரிந்து வருகின்றனர். இந்தக் கால கட்டத்தில் தான், நோர்வே நல்லொழுக்க இளைஞர்கள் மத்தியில், சர்வதேச திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. அத்திட்டத்தை இலங்கையில் அமுல் செய்வதற்காக இலங்கை இளைஞர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தினர்.

இலங்கை - நோர்வே அரசும் இணைந்து இத்திட்டத்தை அமுல் செய்தன.

1964-ம் ஆண்டு...

காரைநகரில் ஈ-நோர் அபிவிருத்தித்திட்டம் ஆரம்பமானது.

அந்நியர்வருகையைஎதிர்த்தவர்கள், அவர்களை அன்புடன்

(9-ம் பக்கம் பார்க்க)

ஐயா. ஸச்சிதானந்தன்

## இன்று குருத்து ஞாயிறு:

# தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா!

இயேசுக் கிறிஸ்து மண்ணகத்திலே மக்களோடு மனிதராக வாழ்ந்த வாழ்க்கையில் மகத்தான நிகழ்ச்சிகள் எத்தனையோ உள்ளன! ஆனால் அவற்றிற்கெல்லாம் மணிமகுடமாய் அமைபவை, அவருடைய பாடுகள் இறப்பு, உயிர்ப்பு என்னும் மறை நிகழ்ச்சிகளாகும். உலகெங்கும் பரவியுள்ள கத்தோலிக்கத் திருச்சபை இம்மறை நிகழ்ச்சிகளை ஆண்டுதோறும் சிறப்பான முறையில் நினைவுபடுத்தி வருகின்றது. கிறிஸ்தவ மக்கள் அனைவரும் முழுமையாகப் பயனுள்ள முறையில் பங்கெடுக்கவேண்டும் என்பதற்காக தவக்காலம் என்று நாற்பது நாட்களைத் திருச்சபை தந்திருக்கின்றது. இன்றோடு தவக்காலம் முடிய, திருப்பாடுகளின் வாரம் துவங்குகின்றது!! இயேசுக் கிறிஸ்துவின் இறுதி வாரத்தின் நிகழ்ச்சிகளையும், அவற்றின் வழியாக கிறிஸ்து உணர்த்துகின்ற உண்மைகளையும், அளப்பரிய அன்பையும், ஈடிணையற்ற தியாகத்தையும் மக்களின் சிந்தனைக்குக் கொண்டுவந்து, அவர்களைச் சீரிய மக்களாக, விளங்கி நடத்துகின்றது திருச்சபை.

வெற்றி வேந்தனாக ஜெருசலேம் பெருநகரில் இயேசுக் கிறிஸ்து நுழைந்ததை நினைவூட்டிக் கொண்டாடும் விழா தான் குருத்தோலை ஞாயிறு விழா!

### குருத்தோலை

அன்று எண்ணிறைந்த மக்கள் ஈச்சமரத்தின் கிளைகளை ஏந்திக்கொண்டு 117. வது சங்கீதம் பாடிக்கொண்டு, ஆரவாரம் பொங்க கிறிஸ்துவை அரசர் என்றும், இறைவனால் அனுப்பப்பட்டவர் வாழ்க என்றும் அறிக்கையிட்டார்கள். சீரிய மன்னனின் ஆதிக்கத்தை முறியடித்து வந்த சிமோன் மக்கபேயுஸ் வெற்றி வீரராக இவ்வாறுதான் சங்கீதம் பாடி எருசலேமில் பவனியாக அழைத்துவரப் பட்டார்.

குருத்தோலைப் பவனி முக்கியமாக இரத்தம் சிந்திப் பெற்ற வெற்றியை வெளிப்படுத்துகிறது. குருத்தோலைகள் கரங்களில் தவழ்ந்தவாறு கிறிஸ்துவை மன்னனெனப் புகழ்ந்தவாறு கிறிஸ்துவ மக்கள் இன்று விழாவில் கலந்துகொள்கின்றார்கள். விழாமுடிந்து வீடு திரும்புகின்ற அடியார்கள் உற்சாகத்துடனும் பக்திஉணர்வுடனும் குருத்தோலைகளைக் கொண்டு தங்கள் இல்லங்களை அணிசெய்கின்றார்கள். புனிதப்படுத்துகின்றார்கள். தம்முடைய இரத்தத்தைக் கொட்டி சாத்தான்மீதும், அநியாய சக்திகள்மீதும் வெற்றி கண்ட இயேசுவுக்குத் தங்களை முழுவதும் தத்தம் செய்கின்றார்கள் என்று அவர்களது வீடுகளில் தொங்கும் குருத்தோலைகள் எடுத்தோதுகின்றன.

### கழுதை:

கீழை நாடுகளில் அன்று அரசர்கள் பயன்படுத்திய வாகனங்கள் இரண்டுவகையுண்டு படையெடுத்துச் செல்லும் போது அவன் குதிரையை வாகனமாகப் பயன்படுத்த, அமைதியான காலங்களில் மன்னர் கழுதைமீது அமர்ந்துவருவான். யெருசலேமில் மக்கள் புடைசூழப் பவனிவருகின்ற இயேசுகிறிஸ்து கழுதையின் மீதுசவாரிசெய்கின்றார் அமைதியின் அண்ணலாக, இதயங்களிலும், இல்லங்களிலும், இகத்திலும் உண்மையான, உலகம் கொடுக்கமுடியாத சமாதானத்தையும், நிரந்தரமான சாந்தியையும் வழங்குகின்ற இயேசு சாந்தமான கழுதையின்மீது அமர்ந்து வருவது சாலப்பொருந்தும்.

அன்றியும் கழுதைக்குட்டியின்மேல் ஏறிவருகின்றவரை மெசியா என்றும், மீட்டர் என்றும் ஏற்கனவே சக்கரியாஸ் இறைவாக்கினர் கூறியிருந்தார். 'இதோ உன் அரசர் உன்னிடம் வருகிறார். நீதியும் வெற்றியும் பெற்றுக்கொண்ட அந்த வீரர் எளியவர், கழுதையின் மேலும் பொதி மிருகக் குட்டியின்மேலும் அமர்ந்து வருகிறார்.' (சக் 9/9) இயேசுக் கிறிஸ்து இந்தப் பவனியின் போது கழுதைக்குட்டியின் மீது ஏறி வந்து, சக்கரியாஸ் இறைவாக்கினர் முன்னறிவித்த மெசியா மீட்பர் தாமே என்று எண்பித்துக்காட்டுகிறார்! இந்தக் கிறிஸ்துவுடன் தன்னை இணைத்துக்கொள்கிற ஒவ்வொரு மனிதனும் மன்னன் ஆகின்றான். ஆனால் அறநிலையடைய பாடுகள் பட வேண்டும்.

—அருட்திரு மேரி பஸ்ரியன்

## சுவைஞர் கருத்து

கடந்த வாரமலரில் வெளியான 'வாழப் பிறந்த உயிர்களைப் பலியிடலாமா?' என்ற கட்டுரை சிந்தனைக்குரியதாய் அமைந்தது! அறிவியலில் முந்திவிட்ட இன்றைய சமுதாயத்திடம் கேள்விக் கணைகளைத் தொடுத்தவாறே ஆசிரிய தன் கருத்தினைக் கூறிய பாணி மெச்சக்கூடியது. வித்தகர் மிகுந்துவிட்ட யாழ். மண்ணிலேயே இத்தகைய பலி நிலவுவதனை நாசுக்காய் சொன்ன ஆசிரியர் இவற்றினைத் தவிர்க்க - வெறுமனே மாதர் - மழலைகட்கு தனித்தனி ஆண்டாய் கொண்டாடும் நாம் குற்றத்தடுப்பாண்டான எண்பதினை தனி உயிர்ப் பலியை முற்றாய் நிறுத்தும் ஆண்டாயாவது ஏற்றுக் கொள்வோமே என்று வேண்டுதல் தொடுத்த பாணி தனி! உயிர்களைக் காக்கும் ஆண்டவனே உயிர்களைத் தன் முன் வெட்டுவதை எப்படி விரும்புவார் என்ற இன்னோர் கேள்வியினை அக்கட்டுரையினை சுவைத்த காரணத்தால் யானும் உயிர்ப் பலி செய்வோரிடம் கேட்டு: மறவன்புலவு சச்சிதானந்தனின் சிந்தனைச் சிதறலைப் போன்ற சிறந்த அம்சங்களைத் தொடர்ந்து வாரமலரில் பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

- புலோலியூர்
ஆ. இரத்தினவேலோன்

மறவன்புலவு - சச்சிதானந்தன் எழுதியிருந்த கட்டுரை. நேர்த்தி என்ற பேரில் உயிர்களைப் பலியிடும் மூடவாதிகளுக்கு ஒரு சாட்டையாகவும் அத்தகைய செயல்களை அனுமதிப்போருக்கும், ஆதரிப்போருக்கும், ஒரு பூகம்பமாகவும் எதிரொலித்திருக்கும்.

இருந்தும் உயிர்ப்பலி விஷயத்தில் தனது கட்டுரையில் கிறிஸ்தவ தேவாலயங்களையும் சேர்த்திருக்கிறாரே! எந்தத் தேவாலயத்தில் எப்பொழுது உயிர்ப்பலியிடப்பட்டது என்பதை அவர் ஆதாரங் காட்டி நிரூபிப்பாரா என்பதை அவரின் திறமையின் பேரால் கேட்டு நிற்கிறேன்.

ச. பாலன் சேவியர்
[illegible]
[illegible]லப்பிட்டி.

## நமது நூல்நிலையம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞானகாண்டமான பழைய உபநிடதங்களில் மத பேதங்களுக்கு இடமில்லை. அங்கு பிரமஞானத்தைப் பற்றியே பேசப்படுகிறது.

இந்நூலில் காணப்படும் ஒரு சிறந்த அம்சம் யோக சுவாமிகளுக்கு மிகவும் பிடித்தமான ஔவையாரின் விநாயகர் அகவலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் முக்கிய இடமாகும். பேராசிரியர் சுவாமிநாதனின் மொழிபெயர்ப்பும், ரோமன் லிபியில் எழுதப்பட்ட அகவலும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவ்வகவலில் பக்தி, யோகம், ஞானம் எனும் மூன்று அம்சங்களும் விரவியிருப்பதை ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். ஔவையார் நீண்ட காலம் வாழ்ந்தது, அகவலில் வர்ணிக்கப்படும் குண்டலயோகத்தில் பெற்ற சித்தியே காரணமென்று கொள்ள இடமுண்டு.

விநாயகர் வணக்கமாக அமைந்த இன்னுமொரு ஞான நூல் 'காசித்துண்டி விநாயகர் திருவருட்பா', என்பதாகும். இப்பதிகம் சுன்னாகம் செல்லாச்சியம்மையாரால் விரும்பிப் பாராயணம்செய்யப்பட்டதாகும். அதிற் காணப்படும் பின்வரும் செய்யுளின் பகுதி விநாயகர் அருளைப்பெற்ற அடியார்களின் அதீத நிலையை நன்கு விளக்குகிறது.

இரவில்லை பகலில்லை யிலாப
சேதங்களில்லை
யின்பதுன்பங் களில்லை
யானில்லை யெனதில்லை
யிதமில்லை யகிதமில்லை
யெண் டிசைகள்
காலமில்லை
வரவில்லை போக்கில்லை
பாவபுண்ணியமில்லை
மரணம் பிறப்புமில்லை
மன்னுதி யாசையில்லை
மனமான பேயில்லை
மலமாயை யில்லையென்று
பரவு பட்டப் பகலெனும்
பெரிய வுன் வடிவு
பார்த்திருக்கின்ற
வடியார்
(பக்கம்-258)

மேற்படி செய்யுளின் ஆங்கில மொழிபெயர்ப்பு இந்நூலில் காணப்படுகிறது.

இந்நூலில் கணேசர் பற்றி நாயன்மார்களும் இராமலிங்கர் போன்ற அடியார்களும் பாடியிருப்பது குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் கார்த்திகை, மாதங்களில் பரவலாக அனுட்டிக்கப்படும் பிள்ளையார் விரதத்தை பற்றியோ, அக்காலத்தில் படிக்கப்படும் சுன்னாகம் வரதமுனிவரால் இயற்றப்பட்ட 'பிள்ளையார் கதையை'ப் பற்றியோ குறிப்பிடப்படவில்லை. பிள்ளையார் விரதம் கார்த்திகை மாத அபர பக்க பிரதமை முதல் மார்கழி மாத பூர்வபக்க சட்டிவரையும் அனுட்டிக்கப்படும் அக்காலத்தில் படிக்கப்படும் பிள்ளையார் கதையில் அகத்தியர் பிள்ளையார் பற்றி அருளிய கதையும், இலிங்கபுராணம், கந்தபுராணம் உபதேச காண்டம் முதலிய நூல்களில்காணப்படும் கதைகளும் இடம்பெற்றுள்ளன. வரதமுனிவர் பிள்ளையர் கதை விநாயகர் அகவல்போல் பலரால் நித்திய பாராயணத்திற்குரிய நூலாகக்கொள்ளப்படுகிறது.

இந்நூலில் ஆசிரியர் உலகின் பல பாகங்களிலும் சிறப்பாக தென்கிழக்காசிய நாடுகளில் கணேச வணக்கம் பரவியதையும், கணேசரின் பல்வேறு தோற்றங்களையும் வருணித்துள்ளார்.

இந்துசமயத்தைப் பற்றியும், இந்து நாகரிகத்தைப் பற்றியும் அறியமேல்நாட்டார்பேராவல் கொண்டிருக்கும் இந்நாளில் 'ஓம் கணேச' போன்ற நூல்களை உலகமொழியாகிய ஆங்கிலத்தில் வெளியிட்டிருப்பதன் மூலம் திருமதி நவரத்தினம் அவர்கள் அருஞ்சேவை புரிந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரிக்கட் ஸ்பெசல்

இங்கிலாந்தைச் சேர்ந்த டபிள்யூ. ஜி. கிரேஸ் என்பவர் துடுப்பாடிக்கொண்டிருந்த போது L. B.யில் ஆட்டமிழந்த போது நடுவரிடம் சென்று தமது சுட்டுவிரலால் ரசிகர்களைக் காட்டி இவர்களெல்லாம் எனது ஆட்டத்தைப் பார்க்க வந்தார்களா? அல்லது உமது தீர்ப்பைப் பார்க்க வந்தார்களா?' என்றாராம். நடுவர் உட்பட மைதானத்தில் இருந்த ஆட்டக்காரர்கள் அனைவருக்குமே சிரிப்பை அடக்கமுடியவில்லை.

கே. ரகுநாதன்,
யாழ்ப்பாணக்கல்லூரி,
வட்டுக்கோட்டை.

## சுவைத்த துணுக்குகள்

### 500வது ஓட்டத்தில் 'ரன்-அவுட்'

முதல் தரகிரிக்கட் ஆட்டம் ஒன்றில் பாகிஸ்தானைச்சேர்ந்த கனிவ் முகமட் 499 ஓட்டங்களைப்பெற்று ரன்-அவுட்டானார். 500வது ரன்ஓடும்போதே இது நடந்தது இல்லாவிடின் உலகின் அரை ஆயிரம் ரன்களை அடித்த வீரருக்கான பெருமையை இவர் தட்டிக் கொண்டிருப்பார்.

●

### 197 செஞ்சரிகள்

முதல்தர ஆட்டத்தில் 197 சதங்களை எடுத்தவர் இங்கிலாந்தைச் சேர்ந்த ஹொப்ஸ் என்பவராவர். இவர் 1931-ம் ஆண்டு இலங்கைக்கு வந்த போது 3 சதங்களை அடித்தார். அதையும் முதல்தர ஆட்டமெனக் கணித்திருந்தால் சதங்களில் இரட்டைச் சதமடித்த பெருமையைப்பெற்றிருப்பார்.

●

### தொடர் செஞ்சரிகள்

தொடர்ச்சியான இன்னிங்சுகளில் டெஸ்ட் பந்தயங்களில் 5 சதமெடுத்தவர் மேற்கிந்தியாவைச் சேர்ந்த வீக்ஸ் என்பவர்.

●

### முறியடிக்கப்படாத சாதனை

ஹரி சோபர்ஸ் ஒருவர்மட்டுமே அவுஸ்திரேலிய கிரிக்கட் பருவகாலத்தில் 1000 ஓட்டங்களைப்பெற்றும், 50விக்கட்டுகளை வீழ்த்தியும் இருக்கின்றார் இவர் தென் அவுஸ்திரேலியாவுக்காக விளையாடியபோது இதை இருமுறை சாதித்துள்ளார் இதுவரை இது முறியடிக்கப்பட்ட சாதனையாகும்

தகவல்: மா. மகேந்திரன்
இலங்கை ஒலிபரப்புக்
கூட்டுத்தாபன விளையாட்டுச்
செய்தி நிருபர்.
(G. C. E O/L)
பன்/அடம்பன் ம. வி.,
அடம்பன்.

# சரித்திரம் படைத்த கிரிக்கட் டெஸ்ட்

**1960-ம்** ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கும், மேற்கிந்தியாவுக்குமிடையில் பிறிஸ்பேன் மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் டெஸ்ட் மூலம் புதிய வரலாறு படைக்கப்பட்டது. இது ஒரு அதிசயம் என்றே கூறலாம். 103 வருட கிரிக்கட் சரித்திரத்தில் ஒரு கிரிக்கட் போட்டி வெற்றியில் முடியலாம் அல்லது தோல்வியில் முடியலாம். இவை இல்லாவிட்டால் வெற்றி தோல்வியின்றி முடிவடையலாம். ஆனால் இப்போட்டி சரிசமமாக (Tie) இறுக்கத்தில் முடிவடைந்திருக்கின்றது. என்ன புதுமை!

பூவா தலையாவில் ஜெயித்த மேற்கிந்தியக் கோஷ்டித் தலைவர் பிராங்ஹொறல் முதலில் துடுப்பெடுத்தாட முடிவெடுத்தார். 3 விக்கட் நஷ்டத்திற்கு 45 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் காப்டன் வொறல் ஆடுவதற்குக் களத்தில் வந்தார். இவர், கிரிக்கட் ராஜா என அழைக்கப்படும் ஹரி சோபர்ஸுடன் சேர்ந்து ஆடி 65 ஓட்டங்களைப் பெற்றார். இதன் பின்பு சொலமன் 65 ஓட்டங்களையும், விக்கட் பாதுகாப்பாளர் அலெக்சாண்டர் 60 ஓட்டங்களையும், அதிவேகப் பந்து வீச்சாளர் வெஸ்லி ஹோல் 50 ஓட்டங்களையும் பெற்று மேற்கிந்திய அணியின் தொகையை 453-க்கு உயர்த்தினர். சோபர்ஸ் பெற்ற 132 ஓட்டங்கள் அன்றைய ஆட்டத்தின் சிறப்பம்சமாகும். ஆஸ்திரேலிய தரப்பில் டேவிற்சன் திறமையாகப் பந்துவீசி 135 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளை வீழ்த்தினர்.

ஆஸ்திரேலியா தனது முதல் இனிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து 505 ஓட்டங்களைப்பெற்றது. நோமன் ஒநீல் மிகவும் சிறப்பாக ஆடி 181 ஓட்டங்களைப் பெற்றார். மக்டொனல்ட் 57 ஓட்டங்களையும், பொபி சிம்சன் 92 ஓட்டங்களையும் பெற்றனர். மேற்கிந்தியா தனது இரண்டாவது இனிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து 284 ஓட்டங்களை எடுத்தது. காப்டன் வொறல் இம்முறையும் 65 ஓட்டங்களைப் பெற்றார். டேவிற்சன் 87 ஓட்டங்களுக்கு 6 விக்கட்டுகளை வீழ்த்தினர்.

ஆஸ்திரேலியா வெற்றி பெறுவதற்கு 233 ஓட்டங்களை 275 நிமிடங்களில் பெறவேண்டிய நிலையில் இரண்டாவது இனிங்ஸ் ஆரம்பித்தது. டேவிட்சன் திறம்பட ஆடிப் பெற்ற 80 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆனார்.

7 விட்கட் நஷ்டத்திற்கு 227 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆஸ்திரேலியா தனது கடைசி ஓவரைச் சந்தித்தது. அப்போது ஆஸ்திரேலியக் கோஷ்டித் தலைவர் றிச்சி பேனுட் 52 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலிருந்தார்.

8 பந்துகளைக் கொண்ட ஓவரில் கடைசி ஓவரை அதிவேகப் பந்து வீச்சாளர் வெஸ்லி ஹோல் வீசுகின்றார். றிச்சி பேனுட்டன் ஆடுபவர் வலிகிறவுற்.

வெற்றிபெறத் தேவையான ஓட்டங்கள் 6. கைவசம் 3 விக்கட்டுகள் [illegible]

பந்து இல. 1

கிறவுற் பந்தை அடிக்க முற்படுகிறார். எகிறிவந்த பந்து அவரின் காலில் பட்டு பக்கத்தே விழுந்து செல்கிறது. ஆனால் மின்னல் வேகத்தில் பெனுட் ஓடிவந்துவிட்டார். ஒரு ஓட்டம் ஆஸிக்கு.

இப்போது தேவையான ஓட்டங்கள் 5. கைவசம் 3 விக்கட்.

பந்து இல. 2

றிச்சி பேனுட் தடுத்து ஆடுகின்றார். ஓட்டமெதுவுமில்லை.

பந்து இல. 3

றிச்சி பேனுட் பந்தைச் சரியாக அடிக்காததால், லேசாக மட்டையில் பட்ட பந்தை விக்கட் காப்பாளர் அலெக்சாண்டர் லாவகமாகப் பிடிக்கின்றார். பேனுட் ஆட்டமிழந்தார்.

இப்போ தேவையான ஓட்டங்கள் 5. கைவசம் 2 விக்கட்.

பந்து இல 4

மைதானத்தினுள் வந்த ஆட்டக்காரர் இயன் மக்கிவ் ஸ்கொயர் திசையில் தட்டிவிட்டு ஓடி ஒரு ஓட்டத்தைப் பெறுகின்றார்.

தேவையான ஓட்டங்கள் 4. கைவசம் 2 விக்கட்.

பந்து இல 5

கிறவுற் பந்தை உயர அடிக்கின்றார். ஜோகன்கன் ஹாய் பந்தை நோக்கியவாறு அதைப் பிடிக்கச் செல்கின்றார். ஆனால் பந்து வீசிய ஹோலும் பந்தை நோக்கிச் செல்கின்றார். இருவரும் மோதிக்கொள்கின்றனர். பந்து தரையில் விழுகின்றது. இதையிட்டு வொறலுக்கு கோபம், ஆனால் ஆஸி வீரர்களுக்கு ஒரு ஓட்டத்தைப் பெற்ற கொண்டாட்டம்.

இப்போது தேவையான ஓட்டங்கள் 3. கைவசம் 2 விக்கட்.

பந்து இல 6

நேராக வந்த பந்தை இடப் பக்கத் திசையில் எல்லைக் கோட்டை நோக்கி அடிக்கின்றார். கொன்றுட் ஹன்ற் வேகமாக எல்லைக் கோடு வழியே ஓடிவந்து பந்தை எடுத்து துரிதமாக விக்கட் கீப்பரை நோக்கி வீசுகின்றார். இதற்கிடையில் இரு ஓட்டங்களை ஓடிமுடித்த ஆஸி-ஆட்டக்காரர்கள் வெற்றி ஓட்டமாகிய 3வது ஓட்டத்தை ஓடுகின்றார்கள். ஆனால் இமைப்பொழுதில் அலக்சாண்டர்விக்கட்டுகளை பந்தாலடித்து வீழ்த்திவிட்டு நடுவரை நோக்கிக் கத்துகின்றார். நடுவரின் கை மேல்நோக்கி உயருகிறது. கிரவுற் ரன் அவுட் ஆனார்.

இலேன், கடைசி ஆட்டக்காரர். மைதானத்தின் மத்தியில் வந்துவிட்டபர். காப்டன் வொறல். ஹோலை நோக்கி ஓடுகின்றார். 'ஹோல்- இப்போது ஒரு நோ போல் (No Ball) வீசினால் உம்மை ஊருக்குக் கூட்டிக்கோண்டு போக மாட்டேன்' என்று கூறிவிட்டு தனது இடத்திற்கு வந்துவிட்டார்.

ஓட்டங்கள் சமம். 232 கைவசம் 1 விக்கட்.

பந்து இல. 7

சாதுரியமாகவும், கவனமாகவும் வீசுகின்றார் ஹோல் இலேன் ஸ்கொயர் திசையில் திருப்பிவிட்டு ஓடுகின்றார். பந்தைத் தடுப்பவர் சொலமன். இயன் மக்கீவ்- விக்கட்டைநோக்கி ஓடிவருகின்றார். சொலமனுக்கு மூன்று

(9-ம் பக்கம் பார்க்க)

வாசு

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

## இந்திய-பாக். டயறி

இந்திய காப்டன் சுனில் கவாஸ்கர் இதுவரை மூன்று டபிள் செஞ்சரிகளையும் இருபத்திமூன்று செஞ்சரிகளையும் அடித்துள்ளார். இவர் எடுத்த ஆகக்கூடுதலான தொகை 221 ஓட்டங்கள்.

இந்திய பந்து வீச்சாளர்களில் செஞ்சரிபோட்டவர்களில் தேவ் மட்டுமேதான்.

நத்தைமாதிரி 500 நிமிடங்களில் ஒரு செஞ்சரிபோட்டு உலக சாதனையை ஏற்படுத்தியவர் பாகிஸ்தான் ஆட்டக்காரரான முதாசர் நாஸர்.

பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா 1960-ம் நிண்டு 539 ரன்கள் எடுத்து ஆட்டத்தை நிறுத்தியது. பாகிஸ்தான் 1978-ம் ஆண்டு 539 ரன்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்தியது. இரண்டு அணிகளும் ஒரே இன்னிங்ஸில்' எடுத்த அதிக ரன்கள் இதுதான்.

27 வருடங்களுக்குப் பிறகு இந்தியா -பாகிஸ்தானை முதல நடவையாக வென்றது 1969 டெஸ்டிலேயே.

தொகுப்பு:
என், ஞானசம்பந்தன்,
இந்துக்கல்லூரி,
சாவகச்சேரி.

# கிரிக்கட்டின் தோற்றம்

'கிரிக்கட்' இன்று விளையாட்டு உலகில் இளைஞரையும் ஏன் பெண்களையும் அதிகமாகக் கவர்ந்து வரும் ஒரு பிரபலமான, சுவையான விளையாட்டாகும். விளையாட்டுகளிலே மதிப்பாக இராச விளையாட்டு (King of games) என இது அழைக்கப் படுகிறது!

இங்கிலாந்தில் 'கிரிக்கட்' ஒரு தேசிய விளையாட்டாகக் கருதப்படுகிறது. இது தற்போது, இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, மேற்கிந்திய தீவுகள், இலங்கையிலும் விளையாடுவதுடன், பிரபலமடைந்ததும்கூட.

இது முதன் முதல் இங்கிலாந்தில் பதினைந்தாம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான சான்றுகளும் உண்டு. இதுவே இன்றைய பிரதான விளையாட்டுகளில் பழமையானதெனக் கருதப்படுகிறது.

கிரிக்கட் விளையாட்டின் முதல் முக்கிய போட்டி இங்கிலாந்துக் கோஷ்டிக்கும் கென்ற் கோஷ்டிக்குமிடையிலே நடைபெற்றது. இது பதினெட்டாம் நூற்றாண்டில் அதாவது 1719-ல் விளையாடப்பட்டது. முதன் முதல் கிரிக்கட் விதிமுறைகள் அச்சடிக்கப்பட்டது 1744-ல் தான். இதன் பின்னரே இது வேற்று நாடுகளுக்குப் பரவலடைந்தன.

இந்தியாவிலும், இலங்கையிலும் கிரிக்கட் விளையாட்டு ஆங்கிலேயர் ஆட்சியின் போதே அறிமுகப்படுத்தப்பட்டு விளையாடப்பட்டது. இன்று உலகில் அதிவேகமாக கிரிக்கட் பரவலடைந்து வருகிறது.

உலகில் இன்று ஆறு நாடுகளே 'டெஸ்ட் ஆட்டங்களைப் பாரட்பி வருகிறது. வெகுவேகமாக முன்னேறி வரும் இலங்கையும் விரைவில் 'டெஸ்ட்' கிரிக்கட் போட்டிகளில் கலந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வி. சந்திரகுமார்
யாழ். பத்திரிசியார் கல்லூரி

# கிரிக்கட் கிக்ஸ்

ஒருவர்: பார்த்தீங்களா அவர் 'போர்' ரன்ஸ் 'போர்' ரன்சாக அடிச்சுக்கொண்டே இருக்கிறார்.

மற்றவர்: யோவ் எங்களுக்கும் கண் இருக்கு சும்மா 'போர்' அடிக்காமல் இருங்காணும்!...

●

சோமர்: என்ன உங்கள் பெண், டாக்டர், எஞ்சினியர் மாட்பிள்ளைகளை வேண்டாம் என்றாளாம், ஆசையற்றவள்?...

தம்பர்: அதை ஏன் கேக்கிறீர் இப்ப கிரிக்கட் சீசன், யாராவது பெரிய கிரிக்கட் பிளேயர் ஒருவரைத் தான் கலியாணம் முடிப்பாளாம்!...

●

கந்தையா: என்ன வேலையில்லாமல் ரோட்டு அளந்து திரிஞ்ச உங்கள் மகனுக்கு நல்ல சீதனத்தோடை கல்யாணம் முடிஞ்சுதாமே?...

முத்தையா: ஆம் இப்ப கிரிக்கட் சீசன், பெண்பிள்ளைகள் மத்தியில் கிரிக்கட் காரங்களுக்கு நல்ல மார்கேட் என்ர மகனும் பள்ளியில் கிரிக்கட் விளையாடினவன் எண்டு பொய் சொல்லி முடிச்சு வைச்சுட்டன்!...

●

வசந்தன்: என்ன அவர் துடுப்பாடும் போது எல்லா பீல்டரும் தலைகீழாக நிக்கிறார்கள்?...

கணேசன்: அவர் தலைகீழாக கிரிக்கட் விளையாடுவாராம்... அதைச் சரிப்படுத்தத்தான் பீல்டர்கள்... தலைகீழாக நிக்கிறார்கள்!...

★

குமார்: அவர் ஆமை இறைச்சியைத்தான் விரும்பிச் சாப்பிடுவார் என்று எப்படி சரக்டாகச் சொன்னீர்கள்?...

சந்திரன்: அவர் ஆமை வேகத்தில் மூன்று மணித்தியாலமாக பட் செய்து இப்பதானே ஏழு ரன்ஸ் எடுத்திருக்கின்றார்!...

★

கந்தர்: என்ன சுப்பர் தள்ளாத வயதில் தலைக்கு 'ஹெல்மட்' போட்டுக் கொண்டு போகிறீர், ஸ்கூட்டர் வாங்கப் போகிறீரா?...

சுப்பர்: இல்லை! இப்ப கிரிக்கட் சீசன் ரோட்டால் போக முடிவதில்லை, பொடியள் அடிக்கிற பந்து தலையைக் கொண்டு போகுது!...

★

அம்பாயர்: இப்ப உடனடியாக கடனுக ஐம்பது ரூபா தந்திடுங்க இல்லாவிட்டால் இந்த ஓவருக்குள் அவுட் கொடுத்து விடுவேன்!...

பட்ஸ்மன்: ?...?...?...

★

ஒருவர், என்ன ஆசிரியர் சார்... கிரிக்கட் சீஸன் வருது போலிருக்கே பத்திரிகையில் என்ன பண்ணப் போறீங்க?

பத்திரிகை ஆசிரியர்: ஒரு "பம்பர்" போடலாம் என்று இருக்கிறேன்.

★

நடிகை: கணவனிடம் இதோ பாருங்க... ஊரெல்லாம் கிரிக்கட் பற்றி பேச ஆரம்பிச்சிட்டாங்க எதுக்கும் நாலு டிக்கட் வாங்கி வையுங்க... இல்லேன்னு தப்பா நினைப்பாங்க... அத்துடன் சிக்ஸர், டவுண்டரி, அவுட்டுன்னு என்னென்று கொஞ்சம் கேட்டுக்கிட்டு வந்து சொல்லுங்க...

– ரஜனிப்பிரியா
மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மனோஹரா யாழ்ப்பாணம்
தினசரி 10-30 a.m. 4-45, 7-00, & 9-45 p.m.
THE LAST OF VIKINGS
(Cinemascope—Color)

ராஜா (யாழ்ப்பாணம்)
98-வது நாள் தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-சந்திரமோஹன் கவிதா நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்ட்மென் கலர்)

SANTHI JAFFNA — Phone: 7642.
Daily 09-45 a.m, 2-30, 4-45, 7-00 & 9-30 p. m.
"SPECIAL DELIVERY" in color
More suited for Adults, and a first - class action film.
திகிலும், பரபரப்பூட்டும் பிரமாண்ட வங்கிக் கொள்ளை! மெய்சிலிர்க்கச் செய்கின்றது. மற்றும் அமெரிக்க தலைநகரின் எழில்மிகு இயற்கைக் காட்சிகள் நிறைந்த சித்திரம்.
NB: Due to Power cut from 12 to 2 p.m. Morning show will start at 9-45 a.m.
மின்வெட்டுக் காரணமாக காலைக்காட்சி 9-45க்கு ஆரம்பமாகும்.

3rd CROWDED WEEK
REGAL JAFFNA. Phone: 360
Daily at 10-30 a. m. 2-00, 4-30, 7-00 & 9-30 p.m.
ROGER MOORE as JAMES BOND
LIVE AND LET DIE
(More suited for Adults)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி - லலிதா
தூக்குத்தூக்கி
லிடோ (யாழ்.நகர்) தினசரி 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30 போன்: 7698
Next Time I Will Kill You

ராணி (யாழ்ப்பாணம்) இன்று மட்டும் தினசரி 4 காட்சிகள்
இறைவன் இன்பமாக விளங்க "இருவர் உள்ளம்" இணையவேண்டிய அவசியத்தை விளக்கும் இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்-சரோஜாதேவி-எம்.ஆர். ராதா எஸ்.வி.ரங்கராவ் இன்னும் பலர் நடித்த
இருவர் உள்ளம்
(புதிய பிரதி)
திரைக்கதை வசனம்: கலைஞர் கருணாநிதி
From 1st April 1980
The Gumball Rally

# ஒன்றுபட்டு....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

குரியவ சகோதரர்களாக வரவேற்றனர்.

சேரியாகக் கிடந்த காரை நகர் நகராக அபிவிருத்தி அடைந்தது.

ஆயிரமாயிரம்இளைஞர்களும் வேலைவாய்ப்பைப் பெற்றனர். நல்லதொரு திட்டத்தை எம்மவர்க்கு தந்தவர்கள். எம்மையெல்லாம் அந்த இயக்கத்தில் சேருமாறு அழைத்து இரு இளைஞர்களை இங்கு அனுப்பினர்.

1976-ம் ஆண்டு சுவீடனில் இருந்து இங்கு வந்த நல்லொழுக்க இளைஞர்கள் காரைதீவில் பலஇடங்களைப் பார்வையிட்டனர்.

பாழ்பட்ட குடிக்கு அடிமையாகிபல குடும்பங்கள் சீரழிந்து போய் இருந்ததைக் கண்டனர்.

ஊரிக்கிராமத்தை அபிவிருத்திசெய்ய திட்டம் தீட்டினர். அராலியை அவதானித்தனர். களபூமியை கல்விப் பணிக்கு தேர்ந்தெடுத்தனர். நாவாந்துறையை நல்லகிராமமாக்க முனைந்தனர். தம்பாட்டியைமாதிரிக்கிராமமாகதேர்ந்தெடுத்து 3000 இளைஞர்கள் இவர்களது பணிக்கு உறுதுணையாக இன்று பணிபுரிகின்றனர். இவர்களது பணி சொல்லில் கூறுவதற்கில்லை. அவர்களது இல்லத்துக்குச் சென்ற என்னையே பிரமிக்கவைத்தது.

வாழ்க்கையில் எதிர்நீச்சல் அடித்துக்கொண்டு கல்வி வாசனையில்லாத குழந்தைகளுக்கு கல்விபோதிக்கும் முறையினை படங்கள்மூலம் விளக்குவதை என்னால் உணரமுடிகிறது.

தெய்வந்தான் இவர்களை இங்கு அனுப்பியதோ என நான் எண்ணுகிறேன். 'மனிதன் ஒரு சமூகப்பிராணி. எனவே பிரச்னைகளை தனியொருவனால் தீர்க்கமுடியாது. சில பொதுவான பிரச்னைகளை நாம் தனித்தனியாகத்தீர்ப்பதிலும்பார்க்க கூட்டமாய் சேர்ந்து தீர்ப்பது இலகுவாய் இருக்கும்' என்று தமது திட்டத்தைப்பற்றி விளக்கினார் நண்பர் அலன்.

ஆயிரமாயிரம் பிரச்னைகள் இந்த நாட்டில் தீர்க்கப்படாமல் இருக்கும்போது நம்மவரை அணைத்து, சமதர்ம பூமியை உருவாக்க நல்லொழுக்க இளைஞர்கள் செய்கிறார்களே என எண்ணி ஒருகணம் மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தில் ஆழ்ந்து நின்றேன்.

மற்றைய நண்பர் ஊலா, 15 நூல்தொகுதியொன்றை எனக்குக்கொடுத்து தமதுகல்வி வழிகாட்டி நூல்கள் என விளக்கம் தந்தார். அவைகளில் பொது அறிவு, நீர் இறைக்கும் இயந்திரம், ஊட்ட உணவுகளும் அதனைப்பெறும் வழிகளும், கோழிவளர்ப்பு, முதல் உதவி, கணக்குப் பதிவியல், இலங்கையில்தலதாபனஆட்சி, அரசாங்கமும் இலங்கையும், குடியியல், நரம்புத்தளர்ச்சி, குழந்தைப்பராமரிப்பு, உடலும் உறுப்புக்களும், சுகாதாரம், கரும்பு, சூரிய குடும்பம் இப்படியாக 15 நூல்கள் இருந்தன.

இந்த நூல்களின் ஒரு சில பக்கங்களைப் பார்த்தபோது கல்வி பயில்வதற்கு 20 ஆண்டுகள் அங்கும்இங்குமாக அலைந்து திரிந்த காலத்தில் இவர்களைச் கண்டிருந்தால் முழுமனிதனாக மாறியிருக்கலாம் என அதிர்ச்சியடைந்தேன். அடுத்தபடியாக ஊரிக் கிராமத்தில் கிராம அபிவிருத்திச் சங்கத் தீர்மானம்- அராலியில் நீர்விநியோகத்திட்டம், தோப்புக்காட்டில் பாடசாலை நிர்மாணம், வலந்தலை, தம்பாட்டி, நாவாந்துறை திட்டங்களை ஒவ்வொன்று விளக்கினர்.

'சீ-நோர் திட்டத்தை' அரசு மூடுவதற்கு திட்டமிட்டுவருவதாக பலர் கூறிக்கொள்கிறார்கள் உங்கள் அபிப்பிராயம் என்ன' என்றேன்.

அவர்களோ அதுவெல்லாம் வெறும் கட்டுக்கதையெனக் கூறி என்னை வழியனுப்பினர்.

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
ஒரு தாய் மக்கள்
(புதிய பிரதி)

வெலிங்டன்... வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்—விஜயா
ஜானகி சபதம்

நாகம்மாள் (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
A.V.M. ராஜன்
தெய்வம்
(கலர்-புதிய பிரதி)

# வவனியாவில் நடைபெற்ற சாரணர் தலைவர்கள் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வவனியா மாவட்டத்தில் நடைபெற்ற சாரணர் தலைவர்கள் பயிற்சியில் மேற்படி மாவட்டத்தைச் சேர்ந்த 36 ஆசிரியர்கள் பங்கு பற்றிப் பயிற்சி பெற்றனர்.

வவனியா மாவட்டப் பிரதம கல்வி அதிகாரி திரு எம். சிமாம்பிள்ளையின்விடாமுயற்சியால் வவனியா மாவட்டத்தில் நடைபெற்ற இப்பயிற்சியில் 16 தமிழ் ஆசிரியர்களும், 10 சிங்கள ஆசிரியர்களும் பங்கு பற்றினர். இவர்களில் 10 பேர் பெண்களாவர்.

தொடர்ந்து 3 நாட்கள் நடைபெற்ற இப்பயிற்சியில் பாடசாலையின் வளர்ச்சிக்கேற்றவாறு மாணவர்களுக்கு கட்டுப்பாடு, ஒழுக்கம், கடமை உணர்ச்சி, கண்ணியம் ஆகிய பண்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட போதனைகள் வழங்கப்பட்டன.

இப்பயிற்சிக்குப் பொறுப்பாக வெளிக்கள ஆணையாளர் திரு. ச. எஸ். சுப்பிரமணியம் கடமையாற்றி அவர்களுக்குவேண்டிய சகலதுறைப் பயிற்சியையும், தற்போதைய சர்வ தேசிய பயிற்சிக் கொள்கைகளைப் பின்பற்றி அளித்தார். அவருக்கு உதவியாக திரு. கே. எம். அரியரத்தினம், திரு. எம். கார்த்திகேயன் ஆகியோர் கடமையாற்றினர்.

(கொ-அ)

......

# சரித்திரம்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கட்டுகளும் ஒரு விக்கட் போல் தெரிகின்றது. நேரே விக்கட் காப்பாளரிடம் எறியாது விக்கட்டைநோக்கி எறிகின்றார், அந்தப்பந்து விக்கட்டை வீழ்த்துகிறது. மக்கீல் 'ரன்-அவுட்' ஆனார். அத்துடன் புதிய சரித்திரமும் படைக்கப்பட்டுவிட்டது.

சொலமன் எறிந்த அந்தப் பந்து விக்கட்டை வீழ்த்தியதனாலேயே அந்த டெஸ்ட் சமமாக முடிந்தது அந்தக்கடைசி ஓவரின் கடைசிப்பந்தை ஓடுவதற்கு ஆஸ்திரேலிய பக்கத்தில் எவரும் இல்லை. 10 விக்கட்டுகளும் விழுந்துவிட்டன. ஸ்கோர் விபரம்: மே. இந்தியா 453, 284. ஆஸ்திரேலியா 505, 232.

# நாளை...

## ஈழகேசரி நினைவுவிழா

"ஈழகேசரி பொன்னையா"வின் 29-ம் ஆண்டு நினைவு விழா நாளை மாலை குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

## புங்குடுதீவில்......

புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் கனிஷ்ட மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி நாளை மாலை 2. 00 மணிக்கு ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

## பௌர்ணமிக் கலைவிழா

யாழ். மாநகர சபை நடாத்தும் மாதாந்த பௌர்ணமிக் கலைவிழாவில் நாளை பரியாரி யார் பரமசிவம், விதியும் சதியும் நாடகங்கள் இடம் பெறவுள்ளன.

## பாடசாலை தரமுயர்வுவிழா

குரும்பசிட்டி பொன் பரமானந்த வித்தியாலய பாடசாலை தரமுயர்வு விழாவும் நிறுவியவர் நூற்றாண்டு விழாவும் நாளை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதனையொட்டி பொருட்காட்சி, விசேட கூட்டம் என்பனவும் இடம்பெறவுள்ளது. (இ)

# கி. ச. மண்டபம் பூர்த்தி

(நெல்லியடி)

புத்தூர் கிழக்கு குமரகுருபரன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தின் நிர்மாண வேலைகள் சுமார் 5 ஆயிரம்ரூபா செலவில் பூர்த்தியடைந்துள்ளன.

மின்சார வசதிகளுடன் இக்கட்டிடத்தினை அமைப்பதற்கான நிதி பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேற்பிள்ளையினால் ஒதுக்கீடுசெய்யப்பட்டிருந்தது

கொட்டகை நிறைந்த காட்சிகளுடன் வெற்றிநடை போடுகின்றது
தினசரி 10-00, 1-30, 4-30, 7-15, 10-00
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
"கிழக்கே போகும் ரயில்" புகழ்
சுதாகர் ★ ராதிகா ★ விஜயன் ★ ரதி ★ பாக்கியராஜ் ★ கலா
மற்றும் பலர் நடித்த
காதல், இசை, நிறைந்த நிந்தமிழ் திரையோவியம்
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)
திரைக்கதை டைரக்ஷன்: வெள்ளிவிழா இயக்குநர் பாரதிராஜா
இசையமைப்பு: இளையராஜா
முக்கிய குறிப்பு:
இரவு 7-15க்கு காண்பிக்கப்படும் காட்சி 10-00க்கு மாற்றப்படும்
1-4-80 முதல் தினசரி 5 காட்சிகள்

TODAY ONLY
SRIDHAR JAFFNA
Daily 5 Shows at 10-30 a.m. 2-30, 4-45, 7-00 & 9-30 p.m.
THAT MAN BOLT
Entertainment in Karate, Judo and Kick-Boxing
1-4-80 முதல்
சிவாஜி-கே.ஆர்.விஜயா நடித்த
திருடன் (புதிய பிரதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று
அதிக ஜெராக்கியானது
குறைந்த செலவில்கூடிய பயணம்
செய்யக்கூடிய குடும்ப வாகனம்.
பல்க்கன்
ஸ்கூட்டர்கள்
ஏப்ரல் மாத முதல்வாரத்தில் வருகின்
றன ஏமாற்றத்தை தவிர்க்க
இன்றே 'புக்' பண்ணி விடுங்கள்
பல்க்கன்ஏஜென்சி
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். போன்;685

## ஜெர்மன் செல்ல இன்றுமுதல் விசா வேண்டும்

(கொழும்பு)

மேற்கு ஜெர்மனிக்குச் செல்ல விரும்பும் இலங்கையர்கள் இனிமேல் இங்கு 'விசா' எடுத்துக்கொண்டே செல்ல வேண்டுமென்று இலங்கையில் உள்ள மேற்கு ஜெர்மன் தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கை வெளிநாட்டமைச்சின் கோரிக்கைக்கு இணங்கவே இன்று முதல் இது அமுலுக்கு வருகிறது என்றும் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

'விசா' இன்றி ஜெர்மனிக்குச் செல்லலாமென்ற நிலைமையைப் பயன்படுத்திய பல இலங்கையர்கள் ஏற்கனவே அங்கு சென்று அரசியல் அடைக்கலம் புகுந்ததை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

புத்தாண்டு
மலிவு விற்பனை
சலுசலாபிடவைகள்-தையல்நூல்கள்
மூஸாஜி பொலித்தீன் வகைகள்
முயல் மார்க் நூல் வகைகள்
லேடன் பெனியன் தயாரிப்புகள்
கீத்தா ஸ்டிப் கொலர்கள்
சிங்கம் இலாஸ்டிக் வகைகள்
கோல்டன் பிறசியர்கள்
பிறசியர் உப உறுப்புகள்
சீக்கோ டிறேடர்ஸ்
43, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

# ஈரானியஷாவை எகிப்திலிருந்துகடத்த பாலஸ்தீன இயக்கத்துடன் இணைந்து சதி!

## லிபிய அதிபர் கடாபி

கெய்ரோ, மார்ச் 29

எகிப்திய இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் ஈரானிய ஷாவை கடத்திச் சென்று ஈரானில் வைத்து மரணதண்டனை விதிக்க லிபிய அதிபர் கேர்ணல் கடாபியும் தீவிரவாத பாலஸ்தீன இயக்கத்தினரும் சதி முயற்சி ஒன்றை மேற்கொண்டதாக எகிப்திய பத்திரிகையான 'அல் அஃரம்' தெரிவித்துள்ளது.

கேர்ணல் கடாபியுடன் இச்சதிபற்றிக்கடந்தவியாழனன்று பாலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதி ஆலோசனை நடத்தியதாகவும் இச் திக்கு ஈரானிய மதத்தலைவர் அயத்தொல்லா கொமெனி இணங்கவில்லை என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

கொமெய்னியின் ஆதரவுடன் மற்றுமொரு சதிமுயற்சியை கேர்ணல் கடாபி மேற்கொண்டதாகவும் அதுவும் தோல்வியில் முடிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

### கல்லீரல் அகற்றப்பட்டது

இதேவேளையில் ஷாவின் கல்லீரல் நேற்றிரவு வெற்றிகரமாக அகற்றப்பட்டதாகவும் ஷா உடன் நலத்துடன் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## காங்கேசனில் 2வது உணவுக் கப்பல்

### 2 லட்சம் அரிசி மூடைகளுடன் வந்துள்ளது

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு, இரண்டு லட்சம் மூடைகளுடன் அரிசிக் கப்பல் ஒன்று வந்து சேர்ந்துள்ளது.

சீன நாட்டுக்குச் சொந்தமான 'லின்யின்' என்ற கப்பல், பர்மா துறைமுகத்திலிருந்து ஒன்பதனாயிரம் தொன் அரிசியை கொண்டுவந்துள்ளது. காங்கேசன்துறை துறைமுகத்திற்கு இவ்வருடத்திற்கு வந்துள்ள இரண்டாவது உணவுக் கப்பல் இதுவாகும். கப்பலின் இறக்குமதி வேலைகளை, இலங்கை கப்பல் கூட்டுத்தாபன பிரதிநிதிகளான க. ஜெயபாலசிங்கம் கம்பனியாருக்கு உணவு வர்த்தக அமைச்சு கொடுத்துள்ளது.

சுமார் ஐந்நூறு தொழிலாளர்கள் ஈடுபடும் இறக்குமதி வேலை சுமார் பத்து நாட்களில் முடிவடையும்.

## செங்கலடி வங்கிக் கொள்ளையில் ஓர் இயக்கத்துக்கும் தொடர்புண்டாம்

### அரச சட்டத்தரணி கூற்று

(கொழும்பு)

செங்கலடி கிராமிய வங்கிக் கொள்ளை வழக்கின்போது கடமையாற்றிய ஜூரர்களின் இல்லத்திற்கு ஏன் பொலிசாரே கல்வீசியிருக்கக்கூடாது?

இவ்வாறு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் விசாரணைசெய்யப்பட்ட பிணைமனுமீது எதிரிகள் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி திரு. சிவசிதம்பரம் கேள்விஎழுப்பினர்.

செங்கலடி கிராமிய வங்கி எதிரிகளான ஆர். பரமதேவா, வி.வி. ஜெயசுந்தரம், கனகரத்தினம் ரஞ்சன், என். வாமதேவன் ஆகியோரை பிணையில் விடுமாறு தாக்கல்செய்யப்பட்ட மனுமீது மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ஓ. எஸ். எம். செனிவரத்ன முன்னிலையில் நேற்று விசாரிக்கப்பட்டது.

இவ்விசாரணையின் போது திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:

எதிரிகள் 2 ஆண்டுகளாக றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர், 1-ம், 4-ம் எதிரிகள் வேறு பல குற்றச் செயல்கள் தொடர்பாக தேவைப்படுகிறார்கள் என்பதனால் அவர்களை பிணையில் செல்ல அனுமதிக்கமுடியாது என பொலிசார் கூறுகின்றனர்.

பல குற்றச் செயல்கள் என்றால் அதை ஏன் பொலிசார் இன்னமும்புலன் விசாரணைசெய்யவில்லை.

துப்பாக்கிக் களவு குற்றச் சாட்டப்பட்ட 1-ம் எதிரியை நீதிபதி ஒருவரே முன்னர் விடுதலைசெய்துவிட்டார்.

ஜூரர்களின்வீடுகளுக்கு கல்லெறியப்பட்டதாகக் கூறி ஜூன் மாதம் 2-ம் திகதி ஜூரர்கள் இல்லாத நீதிமன்றத்தில்இவ்வழக்கு நடைபெற உள்ளது. ஜூரர்களின் இல்லத்திற்கு ஏன்பொலிசாரே கல்வீசியிருக்கக்கூடாது. எனவே ஜூன் 2-ம் திகதிவரையும் அவர்களை றிமாண்டில் வைத்திருக்காது விடுதலைசெய்யுங்கள்.

அரசதரப்பில் ஆஜரான சட்டத்தரணி தமது வாதத்தின்போது கூறியதாவது:

இக்கொள்ளை ஓர் இயக்கத்துடன் தொடர்புடையது எனவே இவ்வழக்கின் எதிரிகளை பிணையில் விடுதலை செய்யக்கூடாது.

இம்மனுமீது தீர்ப்பு வழங்குவதை ஏப்ரல் மாதம் 9-ம் திகதிவரை நீதிபதி ஒத்திவைத்தார். (ம-இ)

## மண்சரிவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வியை 3-வது பிரசவத்திற்காக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதித்திருந்தார். அவருக்குக் கடந்த இரவே ஆண் குழந்தை ஒன்று பிறந்தது.

இவரது மரணவிசாரணை நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் நடைபெற்றது.

மரணவிசாரணையின் போது மரணமானவரின் சகோதரன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

காலஞ்சென்றவர் ஒட்டுமடத்தடியில் வசித்துவந்தார். அரியாலையைச் சேர்ந்த ஒருவரது உழவு இயந்திரத்தின் சாரதியாகக் கடமையாற்றிய இவர். சம்பவதினம் காலை 5 மணியளவில் உழவு இயந்திரத்தை எடுத்துக்கொண்டு ஆனைக்கோட்டையிலுள்ள மண்மேட்டுக்கு மண் ஏற்றுவதற்காகச் சென்றார். அப்போது அங்கு வேறு உழவு இயந்திரங்களும் மண் ஏற்றிக் கொண்டிருந்தன. இவருடைய இயந்திரத்தில் மண் ஏற்றிய பொழுது மண்மேட்டின் உச்சியில் இருந்து பெரிய மண்பார் ஒன்றுசரிந்தது. அப்போது மண் ஏற்றியவர்கள் எல்லோரும் ஓடிவிட்டனர். எனது சகோதரன் ஓட எத்தனித்த வேளையில் சரிந்து விழுந்து கொண்டிருந்த பெரிய மண்பார் இவர் மீது விழுந்தது.

மண்ணில் புதையுண்ட அவரை வெளியே எடுக்கப் பெரும் சிரமம் ஏற்பட்டது. அவரை வெளியே எடுத்த போது அவர் இறந்துவிட்டார்.

மரணவிசாரணை அதிகாரி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார்.

ஆனைக்கோட்டை பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. எஸ். நாதன் சாட்சிகளை ஆஜர்செய்தார்.

### கறுப்புக்கொடி

உழவு இயந்திரச் சாரதியின் மரணத்தை ஒட்டி யாழ். நகரிலுள்ள உழவு இயந்திரங்களில் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்தன. (கொ-இ)

## 'நவம்' இன்று நோர்வே செல்கிறார்

(கொழும்பு)

சர்வதேச பாராளுமன்ற ஒன்றியக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் இன்று நோர்வே பயணமாகிறார்.

நோர்வேயில் ஏப்ரல் மாதம் 7-ம் திகதி ஒன்றியத்தின் செயற்குழுக் கூட்டமும் தொடர்ந்து ஒன்றியத்தின் இடைக்காலக்கூட்டமும் நடைபெறும்.

தமது பாரியாருடன் செல்லும் திரு. நவரத்தினம் ஜெர்மன், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கும் சென்றுவிட்டு நாடு திரும்புவார். (ம-இ)

......

## இன்றைய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 1500 இளைஞர்கள் மகாவலித் திட்டத்தில் சிரமதானப்பணியில் ஈடுபடவுள்ளனர், இது சம்பந்தமான கருத்தரங்குகள் இன்று காலை யாழ். மத்திய கல்லூரியிலும். மாலை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சிஅமைப்பாளர் திரு. கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்குகளில் மகாவலி அபிவிருத்திச்சபை இயக்குநர்களும் பங்குபற்றவுள்ளனர். (கொ-இ)

......

## யானைகள் பெரும் அட்டகாசம்

(விசுவமடு)

விசுவமடுப் பகுதியில் உள்ள பெருந்தொகையான தென்னை மரங்களையும், வாழைகளையும் சென்ற ஒருவார காலமாக காட்டு யானைகள் அழித்துவருகின்றன. ஐந்து வருட வயதுள்ள பெரிய தென்னைமரங்கள் சாய்க்கப்பட்டுள்ளன. விவசாயிகள் இரவு வேளைகளில் பெரும் பீதியுடன் இருக்கிறார்களென முல்லைத்தீவு அரசாங்க அதிபருக்கு முறையிட்டுள்ளனர்.

வடபகுதி விவசாயிகளே! நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த
DIESEL PUMP (டீசல் நீர் இறைக்கும் இயந்திரம்)
வந்துவிட்டது
* அக்டோபர் மாதம்வரை அலட்சியமாக இருக்காமல் மெற்றிக் தராசு படிகளை இன்றே வாங்குங்கள்
* 5 அந்தர், 10 அந்தர் மேடைத் தராசுகளை மெற்றிக் முறைக்கு மாற்றித்தருவோம்.
உடன் தொடர்புகொள்ளுங்கள்:-
Estd 1922
சாமுவேல் சன்ஸ் அன் கோ. லிமிட்.
206, 208, ஆஸ்பத்திரி வீதி -- யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 462

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மார்ச் மாதம் 30 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post Office, Sri Lanka under No. GL/6948/78.
The Eelanaadu, Post Box No 49, Telegram: 'Eelanaadu' Phone: 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org